தென்மொழி

செந்தமிழைத் தீய்க்கும் சீர்திருத்தம்!

கொச்சைத் தமிழும் கொடுந்தமிழும் கூறவொண்ணுப்
பச்சைத் தமிழும் பயின்றுநிதம்—நச்சுப்படுத்திச்
செந்தமிழைத் தீய்க்கும் சிறுமையரே சீர்திருத்தம்
எந்தமிழ்க்குச் செய்யவந்தார் இங்கு!

சொற்பிழையால் வேற்றுமொழிச்
சொற்கலப்பால் இன்தமிழைக்
கற்பழிக்கும் தீய கயவோரே—பொற்புடைய
செந்தமிழை இங்குத் திருத்தவந்தார் தாமதற்குச்
சொந்தமென்று கொண்டாடிச் சூழ்ந்து!

எழுத்தால் உரையால் இலக்கணத்தை என்றும்
கழுத்தை முரிக்கின்ற காரறிவார் இங்கே
எழுத்துத் திருத்தம் இயற்றுகின்ருர் நண்டு
கொழுத்துத் திரிவதுபோல் கொண்டு!

கலப்புமொழி யால்,எம் கனித்தமிழை நாளும்
உலப்புகின்ற தீய உலுத்தர்—வலுப்பெறவும்
செய்யாத் திருத்தமெல்லாம்
செய்வார்,நாய் சான்றவை,வாய்
வையாப் புகுந்ததுபோல் வந்து.

மொழி-இனம்-நாடு.

குறிப்பு : சான்றவை—சான்ருேர் அவை.
வாய் வையாப் புகுந்தது—வாய் வைக்கப் புகுந்தது,

சுவடி: 15.
ஓலை: 5.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை.
1. உருபா.

24/11/78

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0: 608. அன்புசால் ஐயா, வணக்கம். தென்மொழி சுவடி 15 ஓலை 3—4-இல் புலவர் மறை. திருநாவுக்கரசர் எழுதியிருந்த மடலைக் கண்டு வியப்புற்றேன். அம்மடலை வெளியிட்ட தாங்களே உ.த.க 4-ஆவது பொது மாநாட்டை முன்னின்று நடத்தியிருந்தும் அவர் தம் மடலுக்கு விடைக் குறிப்பொன்றும் எழுதாமலிருந்தது இன்னும் வியப்பாக விருந்தது.

உ.த.க. மாநாடு எழுச்சியூட்டத் தவறிவிட்டதுடன் பலவாறு குறைபட நடந்தது என்பதும் உண்மையே. ஆயின், பொதுக்குழுக் கூடாத நிலையில் தீர்மானங்களே வேண்டியதில்லை என்பதா திருநாவுக்கரசரின் உட்கிடக்கை? மாநாட்டுத் தீர்மானங்களைப் படித்த உ.த. கழகப் பொதுச் செயலாளர் புலவர் இறைக்குருவனார், திருநாவுக்கரசருக்கு, 'யாரோ ஒருவரா'கத் தெரிகின்றாரோ? காமராசர் போலும் கல்லாப் பெரியோர் நாட்டை ஆளலாம். ஆயின், அவரே கல்விக் கூடத்தில் ஆசிரியராகவோ, கல்வித்துறையைக் கண்காணிக்கும் துணைவேந்தராகவோ ஆகிவிட முடியுமா?

புலவர்கள் உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியர்கள் ஆகவும் தலைமையாசிரியர்கள் ஆகவும் தான் இப்போதைய நிலையில் வாய்ப்புள்ளதேயன்றி, அவர்கள் என்னதான் புலமை மிக்காராயினும், கல்லூரிகளிற் பயிற்றுவிக்கும் வாய்ப்பில்லை. அவ்வாறிருக்க கல்லூரிக் கல்வியைக் கண்காணிக்கும் துணைக் கண்காணகராகப் புலவர் அமைவது யாங்ஙனம்? மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பதவிக்குப் பர். வ.சுப. மாணிக்கனாரின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டபோது இக்கால் அமைச்சராக உள்ள ஒருவர் 'தமிழ்பயின்றவர்கள் குறுகிய பார்வையுடையவர்கள்' என்று குறிப்பிட்டதாகக் கேள்வியுற்றேன். ஆங்கிலப்பட்டமும், ஆராய்ச்சிப்பட்டமும் பல்லாண்டுகள் கல்லூரி முதல்வராகவிருந்த பட்டறிவும் பெற்ற ஒரு தமிழ் அறிஞரே 'குறுகிய பார்வையுடையவர்' என்று கருதப்பட்டாரெனின் வேறு என்ன கூறவேண்டும்? ஆங்கிலப் பட்டமின்றித் தமிழ் மட்டும் பயின்று பல்கலைக்கழகத் துணைவேந்தராகும் தகுதியும் திறமையும் படைத்த புலவர் ஒருவரைத் திருநாவுக்கரசரால் சுட்டிக்காட்ட வியலுமா? திருநாவுக்கரசர் துணைவேந்தராகும் வாய்ப்பை உ.த. கழகம்தீர்மானம் போட்டுத் தடுத்துவிட்டதைப் போல அவர் ஓலமிட்டிருப்பதேன்?

ஆங்கிலக் கல்வியையும் ஆங்கில ஆட்சி மொழியையும் வலியுறுத்தும் தீர்மானங்களையும் திருநாவுக்கரசர் குறை கூறியிருப்பது வியப்பே! தமிழ்ப்புலவர்கள் தமிழை ஆரியத்திற்கு அடிமைப் படுத்தியும் கோயில்களில் கிடைக்கும் சுண்டலுக்குத் தமிழை விற்றுக் கொண்டுமிருந்தபோது ஆங்கிலமன்றோ விழிப்புணர்ச்சி யூட்டியது?

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை! மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை: 5.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
துலை தி. பி. ௨00௯-
நவம்பர்–1978

தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
அலுவலகப் பொறுப்பாளர்: அழ. இளமுருகன். *அறி.இ.*
தென்மொழி மின் அச்சகம், சென்னை–5, தமிழகம்.
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்,
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தமிழக அரசின் எழுத்துச் சீர்திருத்தம்.

ஏதையாவது செய்து மக்களிடம் நல்ல பெயர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நடிகர் திரு. இராமச்சந்திரன் அரசு படாதபாடு படுகின்றது. ஆனால், தான் செய்ய விரும்புவதெல்லாம் நல்லவைதாமா, தேவைதாமா, செய்ய வேண்டிய எல்லாவற்றுள்ளும் இன்றியமையாதவைதாமா என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பது அதற்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது. மற்றபடி, கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்துப் பெருமை தேட விரும்புவது இதற்கும் தெரியும்; சட்டமன்றம் போகும் ஓர் ஆட்டுக்குட்டிக்கும் தெரியும்.

அத்தகைய வீண், ஆரவாரத் தேங்காய் உடைப்பு வேலைகளில் ஒன்று, அண்மையில் பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி, அது செய்த எழுத்துச் சீர்திருத்தம். ஏதோ தம்மை ஒரு கமால்பாட்சா என்று கருதிக்கொண்டும், பெரியாருக்கு ஏதோ பெருமை சேர்க்கும் திட்டம் என்று எண்ணிக் கொண்டும் எழுத்துச் சீர்திருத்தத்தை அறிவித்துள்ளது போலும் தமிழக அரசு! எழுத்துச் சீர்திருத்தம் தேவை என்பதற்கு, தமிழ்மொழி துருக்கி மொழியும் அன்று; முதல்வர் நடிகர் இராமச்சந்திரன் அவர்கள் ஒரு புரட்சியாளரும் அல்லர்; வேண்டுமானால், திரைப்படத்தில் அவர் புரட்சி நடிகராக விருக்கலாம். ஆனால் திரைப்படம் வேறு, புரட்சி வேறு என்பது அவருக்கே இக் காலத்திற்குள் நன்கு தெரிந்திருக்கும். திடீர் அறிவிப்புகளும் கட்டளை களும் திரைப்படத்திற்குச் சுவையைத் தரும். உலக நடைமுறைக்கு அருவருப்பையும் வெறுப்பையும் அழிவையுமே தரும்.

எனவே, தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் நிலையான நன்மைகளை ஏதேனும் செய்யவேண்டும் என்று தமிழக அரசு உண்மையிலேயே விரும்பினால், அதற்குப் பற்பல ஆய்வுகள், திட்டங்கள் உள்ளன. அவை திடீர் அறிவிப்புகளால் விளையக் கூடியன அல்ல. நிலையான அடிப்படையை உண்டாகும் அறிவா ராய்ச்சியின்மேல் கட்டப்பெற்ற திட்டவட்டக் கட்டடமாக அவை அமைதல் வேண்டும். அவற்றையும்கூட அவ்வத்துறை அறிஞர் களைக் கேட்டுச் செய்வது தானே முறை. மற்றபடி அதிகாரம் கிடைத்து விட்டதென்று மேட்டைப் பள்ளமாக்குவதும், பள்ளத்தை மேடாக்குவதும் வீண் வேலை; வெட்டி வேலை! (இதில் முதலமைச்சர் இராமச்சந்திரனார் நாள்தோறும் அறிவிக்கும் நூற்றுக்கணக்கான எத்துப் புரட்டுத் திட்டங்கள் அடங்கா.)

தமிழ் பற்றி எண்ணுவதென்றால் அதில் பல துறைகள் உண்டு. இலக்கியம் கற்ற அறிஞர், இலக்கண அறிஞராக இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. அதே போல் இலக்கணந் தெரிந்தவர்கள் எல்லாரும் இலக்கிய ஆசிரியர்கள் ஆகிவிட முடியாது. இனி, இவ்விரு துறையினரும் மொழியமைப்புகளைத் தெரிந்த மொழியறிஞர்கள் ஆக மாட்டார்கள். மொழியாய்வு ஒரு தனித்துறை; எழுத்து ஆய்வும் ஒரு தனித்துறை. இரு துறைகளும் ஒன்றுக்கொன்று நெருக்க முடையன. கண்ணும் காதும் நெருக்கமான உறுப்புகளாயிருப்பினும் ஒரே மருத்துவரால் ஆயக்கூடியன அல்ல. இப்படியிருக்க வெறும் தட்டெழுத்துக்காகவும், மின்னணுப் பொறிக்காகவும் எழுத்துகளை

வெட்டிச் சிதைப்பது, எல்லாரும் எளிமைக்காகக் குடுமி வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் மொட்டையடித்துக் கொள்ளவேண்டும் என்பதும் போன்ற வெட்கக் கேடான மூடச் சீர்திருத்தமே!

அண்மையில் பெரியார் பெயரால் அரசு கொண்டு வந்துள்ள எழுத்துச் சீர்திருத்தம் இவ்வாறுன ஓர் அரைகுறைச் சீர்திருத்தமே. (நல்ல வேளை! இக்கால் உள்ள தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர் திரு. கொண்டல். சு. மகாதேவனின் மண்டை வீங்கித் தனத்தால் 'உயிரும் மெய்யும் மட்டும்' என்னும் ஒருவகை முண்டச் சீர்திருத்தத்தை அரசு ஏனே செயற்படுத்தவில்லை! அம்மட்டில் தமிழ் பிழைத்தது!)

இனி, இக்கால் கொண்டு வரப்பெற்ற எழுத்துச் சீர்திருத்தம் பெரியாரின் திட்டமும் அன்று; ஒரு வெங்காயமும் அன்று! அந்நிலை ஏற்கனவே இருந்த அமைப்புத்தான். பெரியாரோ பிறரோ ஏதோ புதிதாகக் கண்டுபிடித்த சீர்திருத்தம் அன்று அது. (மேலும், பெரியார் குமுகாய, இன, மூடநம்பிக்கை, சாதியொழிப்பு, மதப் பேதைமை முதலிய சீர்திருத்தங்கட்காகவே தலைமேல் வைத்துப் போற்றி வணங்கப்பட வேண்டியவரேயன்றி, மொழித் திருத்தத்திற் காகவோ எழுத்துத் திருத்தத்திற்காவோ அன்று என்பதை அவரைச் சார்ந்த அனைவரும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.) ஐகாரம் (ை) முன்பே, இக்கால் கொண்டு வந்துள்ள சீர்திருத்தத்தில் உள்ளதுபோல், எல்லா உயிர் மெய்களுடனும் தனித்துத்தான் எழுதப்பெற்று வந்தது. இப்பொழுதுள்ள ஐகாரம் (ை) உயிரெழுத்து ஐ யின் மேற்பகுதிக் குறியீடே. அது முன்காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதும் எளிமை கருதி ஐகாரக் கொம்பு (ை) ஆக மாற்றப் பெற்றது. அது முன்பு உயிர் மெய்யெழுத்தாக எழுதும்பொழுது கை, ஙை, னை, ணை என்றுதான் எழுதப் பெற்று வந்தது. கையெழுத்து முறையில் னை-யை எழுத வேண்டுமானுல் நான்கு சுழிகளும் ணை-யை எழுத வேண்டுமானுல் ஐந்து சுழிகளும் தொடர்ந்து இடுவது, எழுதும் விரைவைக் குறைத்ததுடன், ஒன்று இரண்டு என்று சுழிகளை எண்ணிக்கொண்டு எழுதவேண்டிய வீண் வேலையையும் கட்டாயத் தையும் உண்டாக்கியது. எனவேதான் ஐகார(ை)த்தின் ஒற்றைச் சுழியை மட்டும் எழுத்துடன் இணைத்து எழுதும் பழக்கத்தைக் கையாண்டனர். அதனையும் படுக்கையாக இணைத்து எழுதினுல் இருசுழி'னை'க்கும் முச்சுழி'ணை'வுக்கும் வேறுபாடு தெரியாதாகை

யால் மேலே தூக்கி நிறுத்தி ஊ-ணு-லு-ளூ என்று எழுதும் முறையைக் கையாண்டனர். மற்றபடி மற்ற உயிர் மெய்யெழுத்து களான க, ங, ச, ஞ, ட, த, ந, ப, ம, ய, ர, வ ழ, ற ஆகிய 14 எழுத்துகளுக்கு மட்டுமே தனித்து ஐகாரத்தை (ை) முன்னுக இப்பொழுது இருப்பது போலவே எழுதி வந்தனர். 14 எழுத்து களுக்கு மட்டும் ஐகாரத்தைத் தனித்து எழுதிய தமிழ் முன்னோர்கள் ல, ள, ன, ண ஆகிய நான்கு எழுத்துகளுக்கு மட்டும் எழுதத் தெரி யாமல் விட்டு விட்டனர் என்று இப்பொழுதுள்ள சீர்திருத்த மேதைகள் கருதிவிட வேண்டா. அவ்வளவு மூடர்களல்லர் நம் முன்னோர்கள். ஏதோ அறிவு அல்லது பகுத்தறிவு இப்பொழுது மட்டும் வானத்தி லிருந்து 'பொதுக்'கென்று பொத்துக்கொண்டு குதித்து வந்ததாக நினைத்துக் கொள்ளக்கூடாது. நம் முன்னைய மொழியறிஞர்களின் ஓர் எள் மூக்கத்துணை மூளைத்திரட்சிக்கும் நம் மூளைத்திரட்சி அனைத்தும் உறை போடக் காணாது. அவர்களின் மதிப்பை ஏதோ ஒரு வகையில் நாமே குறைத்து மதிப்பிடுவதும், நம் மதிப்பை நாமே உயர்த்திக் கொள்வதும் நம்மின் ஒருவகை அறியாமை அல்லது காரறிவாண்மை யாகுமே யன்றிப் பகுத்தறிவாகாது.

இனி ற, ன வுக்கு கால் (ா) போட்டு எழுதும செய்தியும் இத் தகையதே. 'ா' வீரமாமுனிவர் காலத்தில் தான் உருவானது என்பது நம் எல்லார்க்கும் தெரியும். அதற்குமுன் கால் (ா) வெறும் நேர் கோடு (|) ஆகவே இருந்தது. 'ற' வு, 'ன' னவுக்குப் பக்கத்தில் கோடு இட்டு எழுதுவது, எழுதும் கையோட்ட விரைவில் 'று'வு வையும் 'னு'வன்னுவையும் குறித்துவிடலாம் என்ற குழப்பததை நீக்கவே அவர்கள், நேர்கோட்டைக் கால் 'ா' ஆக்கி எழுதினர். மேலும் இப்பொழுதுள்ள எகர ஒகரக் குறியீடுகளான ஒற்றைச் சுழிக் (ெ) கொம்பும், இரட்டைச் சுழிக் (ே) கொம்பும் எங்கோ புதியனவாக முளைத்த எழுத்துகள் அல்ல. எசர ஒகரத்தின் மாறிய வடிவங்களே! அவற்றையும், குழப்ப நீக்கத்தையும், எழுதும் எளிமையையும் கருதியே இக்கால் வழங்கிவரும் முறையில் எழுதி வந்தனர். இவை யெல்லாம் எண்ணியும் எழுதியும் பார்த்தால் விளங்காமல் போகா.

இப்பொழுதுள்ள தட்டச்சு, மின்னணு முறைகளின் எளிமைக் காக நீண்ட நெடுங்காலமாக ஏற்பட்டு வந்து, திருந்தி (படிமுறை வளர்ச்சியில்) பண்பட்டு வழங்கும் இப்பொழுதுள்ள எழுத்து முறைகளை மாற்றுவது என்பது, குல்லாவுக்காகத் தலையையும்

செருப்புக்காகக் காலையும் வெட்டிச் சிதைக்கும் முறையே ஆகும். இன்னும் இதைவிட இழிவானதும் கேடானதுமான சீர் திருத்தம், மண்டைக்கனம் பிடித்த கொண்டல் மகா தேவனின் முண்ட எழுத்தாராய்ச்சி! அவர் ஆங்கில மொழிக்கு 26 எழுத்துகளே என்னும் மேதை. ஒலி முறைக்கும், எழுத்து முறைக்கும் வேறுபாடு தெரியாத அறிஞர் (!) அவர். ஒலிப்பது எழுத்தாகாது என்று அவர் அறியாமல் (26 × 4) 104 எழுத்துகளுள்ள ஆங்கிலத்திற்கு 26 எழுத்தே என்று தருக்கிக் கூறி வருகிறார். எழுதப்படும் வரி வடிவமே எழுத்து என்பது இலக்கண நூலின் முதற்பாடம்! அதனை அவர் அறிந்தும் அறியாதவர்போல், ஆங்கில மொழி எழுத்துகள் குறைந்த மொழியென்றும், தமிழ்மொழி எழுத்துகள் மிகுந்த மொழியென்றும் மொழி நூல் பற்றி ஏதுமறியாப் பொதுமக்களிடம் கரடியாடி 'உயிரும் மெய்யும்' என்ற ஓர் அறிவற்ற எழுத்துச் சீர்திருத்தத்தைப் பல மேடைகளில் பேசியும், தாள்களில் ஓயாமல் எழுதியும் காட்டி வருகிறார். தமிழ் வளர்ச்சித் துறையில் தப்பித்தவறி அமர்த்தப்பட்டுவிட்ட இம்மண்டைக் கொழுப்பு நிறைந்த சுண்டைக்காய் அறிஞர், எதையாவது புதுமையாக செய்து காட்டித் தம் பெயரைத் தமிழ்மொழி வரலாற்றில் என்றென்றும் நிலைநிறுத்திவிட நினைக்கின்றார் போலும்! இவர் மட்டும் ஏதோ அறிவியலும் தமிழும் கற்றவர் போலும், மீதிப்பெயருக்கு அறிவியல் அறியாவியல் போலும் கருதிக்கொண்டு தம் பதவிப் பெருமையாலும், அதிகார வலிமையாலும் ஏதோ அடிக்கடி அரற்றி வருவதை நாம் கண்டு கொள்ளாமல் இதுநாள் வரை இருந்தோம். இவரின் விடாப்பிடியான தூண்டுதல்களாலேயே இற்றையுள்ள திரு. இராமச்சந்திரனின் அரசு, தமிழ் எழுத்துகளில் கைவைக்கும் துணிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இனி, அரசு அறிவித்துள்ள ஐ, ஔ என்னும் உயிரெழுத்துகளை அய், அவ் என்று எழுதக் கட்டளையிட்டது முழு மூடத்தன மானதும், தமிழ் அறிவற்றதுமான ஓர் அடாவடிச் செயலேயாகும். அய், அவ் என்று எழுதுவது எப்படித் தனி உயிரெழுத்தாகும்? உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்தன்றோ அது. ஐ-யை அய் என்று எழுதத் தொடங்கினால் ஐகாரத்திற்கு (ை) இங்கென்ன வேலை? 'கை' யைக் 'கய்' என்றும் 'பை'யை 'பய்' என்றும் எழுதத் தொடங்கி விடலாமா! இஃது என்ன மூடத்தனம்? குழப்பம்? இவற்றால் எத்தனைச் சொற்குழப்பம், பொருட்குழப்பம் இலக்கணக் குழப்பம் நேரும்

என்பதை இவர்கள் அரியாமற்போனது ஏன்? உயிரெழுத்து என்பது தனி ஓர் எழுத்து! உயிரும் மெய்யும் கலந்து எழுதினுல் அஃது எப்படி உயிரெழுத்து ஆகும்? இஃது என்ன பேரறியாமை! இந்த மூளைக் கிறுக்குத் தனங்களையெல்லாம் இவர்களைச் செய்யச் சொல்லி இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார்? இராமச்சந்திரன் என்ன தமிழறிஞரா? தமிழறிஞராயினும் எப்படி இவர் ஒருவர் நினைப்பதே சரியென்ருகும்? அதனை அறிஞர் உலகம் ஒப்ப வேண்டாவா? நாளைக்குத் தமிழ்மொழியே பிடிக்காத 'துக்ளக்' இராமசாமிகள் ஆட்சிக்கு வந்தால் ஆங்கில 'F' ஐயும் 'Z' ஐயுமன்றோ தமிழ் எழுத்துகளாக மாற்றுவதற்குக் கட்டளையிடுவார்கள். இஃது இறுதியில் எங்கே போய் நிற்கும்? எதில் போய் முடியும்?

இனி, முடிவாக, இப்பொழுதுள்ள தமிழ் எழுத்துகளில் ஏதேனும் அறிவியல் முன்னேற்றத்தடை, உண்மையிலேயே இருக்குமானுல், அத்தடை நீக்கப்படும் முயற்சிகளுக்கு எழுத்துச் சீர்திருத்தம் எந்த அளவில் தேவை என்று உண்மைத் தமிழ் அறிஞர் குழு ஒன்றை அமர்த்தி ஆய்ந்து, அதன் முடிவை முதலில் மக்களுக்கு அறிவித்து, வரும் விளக்கமான ஆய்வறிவுரைகளுக்குப்பின், அவற்றைச் செயல்படுத்துவது பற்றி எண்ண வேண்டுமே தவிர, தான்தோன்றித் தனமாய் எதையும் அரசு செய்துவிட முயற்சி செய்வதோ, அறிஞர் பெருமக்களையும், பொது மக்களையும் அறவே மதியாமல் புறக்கணித்து விடுவதோ, அறிவுடைமையாகாது; அதிகார வெறித்தனம் கொண்டது ஆகும் என்று இது தொடர்புள்ள அரசு அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

இனி, எழுத்துச் சீர்திருத்தம் அறவே வேண்டுவதன்று என்னும் கொள்கையுடையவரல்லம் நாம். காலத்திற்குத் தகுந்த மாற்றங்கள் எதிலும் எங்கும் வேண்டப்படுவனவே! அவற்றைக் கருத்துக்குத் தகுந்த மாற்றமாகவும் செய்தல் வேண்டும் என்பதே நம் கொள்கையாகும். அடாவடித்தனமாக ஒரே மட்டையடியில் கொணரும் அறிவு நிலைச் சீர்திருத்தங்கள் மிக ஆய்வுக்குப் பின்னரே கைக்கொள்ளப் படுதல்வேண்டும் 'துக்ளக்' தலைநகர மாற்றம் போன்றதன்று தமிழ் எழுத்துச் சீர்திருத்தம். தமிழ்மொழி எவ்வாறு இயற்கை அமைப்பும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பண்பட்ட வளர்ச்சியும் உடையதோ, அப்படியே, தமிழ் மொழியின் ஒலியமைப்பும், வரிவடிவமும், இயற்கையோடியைந்த பல்வகையான படிநிலை வளர்ச்சிகள்



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(பாடல் 41-இன் தொடர்ச்சி)

உயிரொடும் உடலெனும்.........சிலவே: அப்புகழ் பெறும் மிகமிகச் சிலவாம் மாந்த உயிர்களுள், இறுதிவரை உடலளவானும் தொடர்பு கொள்ளும் உயிர்களோ மிகவும் சிலவே என்க. என்னை? உலகியல் தொடர்பாகப் பிறிதோர் உயிர் நின்ற உடலொடு பொருந்தி, அவ்வுடல் அழியுங்கால், அத்தொடர்பையும் அறுத்துக் கொள்ளும் தன்மையுள்ள பொது உயிர்கள் சில என்க. பல உயிர்கள் அவ்வாறு உடலளவானும் தொடர்பு கொள்ளாது, அவ்வுடலைப் பற்றிய எழிற் பொருட்டாயினும், இளமைப் பொருட்டாயினும் தொடர்பு கொண்டிருந்து, அப் புறவெழிலும் இளமைப் பருவமும் அழியுங்கால் அவ்வுடல் தொடர்பையும் தவிர்த்துக் கொள்ளும் தன்மையவாம் ஆகலின்.

உயிரொடும் உயிரென.....சிலவே: அவ்வாறின்றி, உலக வாழ்வு உள்ளளவும் மற்றோர் உயிர் தங்கிய உடலொடு பொருந்தி

(முன்பக்கத் தொடர்ச்சி)

கொண்டனவாகும். அவ்வரி வடிவங்களுக்கும் ஒலிவடிவங்களுக்கும் மெய்ப்பொருள் விளக்கங்களும் உண்டு. அவற்றையெல்லாம் பெரியார் சீர்திருத்தம் என்னும் பெயரால் ஒரேயடியாகத் தீர்த்துக் கட்டுவது அடாத செயல்! குற்றமுடைய செயலும் ஆகும்! எனவே தமிழக அரசு இக்கால் வெளியிட்டுள்ள தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் கட்டளையைத் தள்ளிப்போட்டுத் தக்க முறையில் மறு ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செய்தக்க அல்ல செயக்கெடும்! செய்தக்க
செய்யாமை யானும் கெடும்!
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

பெருஞ்சித்திரன்.

யிருந்து, இவ்வுலகத்தில் வாழ்வாங்கு கூடி வாழ்ந்து, தான் தொடர் புற்ற உயிருடல் அழிவுறுங்கால், அவ்வுடலொடு தன் உடல் வாழ்வை யும் தவிர்த்துக் கொண்டு, பிரிந்தேகும் அவ்வுயிரொடு தம் உயிரையும் பொருத்திக் கொண்டு. ஈருயிரும் ஒருயிராய் ஒன்றி உறைந்து நின்று, என்றென்றும் இன்புற்றியங்கும் மீமிசை மாந்த உயிர்கள் மிகமிகச் சிலவே என்க.

என்றிவை எம்மோர் தேறலின்: என்று இவ்வரிய உண்மை களைத் தேர்ந்து, அப்புகழ்க்குரிய வினைகளையே செயலுக்குரியவாகக் கொண்டு, மெக்குரிய எம் தலைவர் விளங்கி நிற்றலுமன்றி, எம் உயிரொடு தம் உயிரையும் பொருத்திக் கொண்டு ஒருயிராக இயங்குவார் ஆகலின்.

இவ்விடத்துத் தலைவி, தான் களவின் கன்றிய காதல் கொண்டு, உடல் நலம் துய்த்தத் தலைவர்க்குத் தகுதி சாற்றினாள் என்றபடி, 'எம்மோர்' என்றதால், எமக்கே உரியர் என்று உரிமையும், பிறள் ஒருத்தியை நாடா ஒழுக்கமும் சிறந்தார் என்று தலைவனைக் குறித்துப் பெருமையுற்றாள் என்க.

மேலும் தாங்கள் இருவரும் வேறு வேறு உயிர்கள் அல்ல; ஒருயிரே என்றும் தோழிக்குணர்த்தினாள். எம் நட்பு வெறும் உடலொடு தொடர்புடையதன்று; உயிரொடு தொடர்புடையது என்றும் தெருட்டினாள் என்க.

உலகத் தொடர்புக்காக மட்டும் எங்கள் உடல்கள் பொருந்தி இன்பம் நுகரவில்லை. உயிர்த் தொடர்புக்காகவே எம் இருவரின் உடல்களும் பொருந்தின என்றாள்.

இனி, இப் பிறவியே எங்கள் ஒருயிர் ஈருடலாகப் பிறவி யெடுக்கும் இறுதிப் பிறவி. மற்று, அடுத்து வரும் பிறவிகளுள் ஒருடல் ஒருயிராகவே பிறந்து இயங்குவோம் என்றும் குறிப்புணர்த்தினாள் என்க.

ஆசிரியர் குறிப்பு

சென்ற தென்மொழி பெரியார் சிறப்பிதழில் (சுவடி 15; ஓலை 3-4) அட்டைப் பக்கத்தில் விலை, ஓலை என்பவற்றை நாம் விலை, ஓலை என்று குறித்தது, அது பெரியார் சிறப்பிதழ் என்பதற்காகவும் அவர்க்குச் செய்யும் வணக்கமாகக் கருதியுமேயாம் என்பதை அனைவரும் உணர்க. மேலும், அவர் வலியுறுத்திய எழுத்துத் திருத்த முறைகளில், இவ்வொரு திருத்தமே ஒரு வகையில் ஒருவாறு ஒப்ப முடிந்த, திருத்தம் என்பதைக் காட்டவும் வேண்டி என்க. இது பற்றி நம் விரிவான கருத்தைப் பின்னர் வெளியிடுவோம்.

இங்ஙன் ஓரினப்பட்ட உயிர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தி உறைந்து உயிர்த்திரட்சி பெற்று இறைமை எய்துவதே மேம்பட்ட மெய்யறிவுக் கொள்கை என ஈண்டு உணர்த்தப் பெற்றது என்க.

குழல் மோந்தோர்: எம் கூந்தலை மோந்தவர். குழல்மோந்தோர் என்றது தம்மை உடலாற் பொருந்தியவர் என்று இடக்கரடக்காகக் குறித்திட வேண்டி என்க.

எம்மின் குன்றும் மறவார்: எம் குழலை மோந்தவர், எம்மையும் யாம் வதியும் எம் குன்றையும் மறவாமல் நினைத்து விரைவில் மீண்டும் வந்து மணப்பார் என்றபடி.

குழலை மோந்தவர், அக்குழலிற் சூடிய பூவின் மணத்தையும், அம் மணம் நிறைந்த பூ மலரும் குன்றையும் யாங்ஙன் மறத்தற் கியலும் என்றாள் என்க.

'புறவுலகம் மறந்த ஆழ்ந்த உறக்கத்து எழுந்து தோன்றும் பல்லாயிரங்கோடி உணர்வு அலைகளுள் அழிந்தன போக எஞ்சியவை சிலவாம்; அவற்றுள் மேனிலை உணர்வுக்கு வந்து உயிரியக்கத்தொடு கலந்து நிற்கும் உணர்வுகளோ மிகச்சில; அவற்றுள் பல அழிந்தவை போக, கட்புலன் முதலிய புறப்புலன் ஒடுங்கிப் புறஅறிவு ஒடுங்காத துயில் நிலையில் கனவுகளாய் முகிழ்க்கும் பன்னூறு உணர்வு நிலைகளுள், நினைவு நிலையில் எதிர்ந்து தோன்றுவன மிகமிகச் சிலவாம்; அவற்றுள்ளும் நிகழ்ச்சிகளாக மலர்வன மிகவும் சிலவாம்; அந் நிகழ்ச்சிகளுள்ளும் தனக்கு மட்டும் பயன்படும் நிகழ்ச்சிகள் சிற்சிலவாம்; அச் சிற்சில நிகழ்ச்சிகளுள்ளும் பிறர்க்குப் பயன்தரும் நிகழ்ச்சிகள் மிகச் சில; அவற்றுள்ளும் பிறர் பயன் படுத்திக் கொள்வன மிகவும் சிற்சில; அவற்றுள் புகழ்ச்சிக்குரியனவோ இன்னுஞ் சில; அத்தகு புகழ்ச்சி வினைகளைச் செய்யும் உயிர்களோ உலகில் சிற்சில; அச்சில மீமிசை மாந்த உயிர்களுள் சிலவே இவ்வுலக வாழ்வின் இறுதிவரை தாம் நட்புக் கொண்ட உடலொடு தொடர்புடையன மிகச் சிலவே என்க. (பிறவெல்லாம் எழிலொடும் இளமையொடும் கழிவன.) அத்தகு தேறிய உடல் தொடர்புற்ற சிற்சில உயிர்களுள் மிகவும் சிலவே தாம் நட்புக் கொண்ட உயிர்களோடு இறுதிவரை பொருந்தி உறைந்து நிலையான இன்பம் பெறுவன. இவ்வுயிரியக்க உண்மைகளை எம்மொடு தொடர்பு கொண்ட எம் தலைவர் தேர்ந்து உணர்ந்துளார் ஆகையால், அவரொடு யாம் கொண்ட தொடர்பும் வெறும் உடல் தொடர்பினது அன்று; உயிர்த் தொடர்பினது. எனவே எம் உயிரியங்கும் இவ்வுடலையும் அது வதியும் இக்குன்றையும் அவர் மறத்தற்கியலாது; எம்மொடு புணர்ந்த காலத்து எம் கூந்தல் மணத்தையும் அதற்கு ஏதுவாகிய மணமிகுந்த மலரையும், அது மலரும் இக் குன்றையும் அவர் நினைவு

யார் இந்தச் செயவர்த்தன? என்ன சொல்கிறுர் இவர்?

பேரன்புடையீர் வணக்கம் பல. அண்மையில் இந்தியா வந்த இலங்கையின் குடியரசுத் தலைவர் திரு. செயவர்த்தன அவர்கள், இலங்கையில் தமிழர்களுக்கு மொழி, கல்வி, வேலை வாய்ப்புகள் போன்ற துறைகளில் உள்ள குறைபாடுகளை தாம் ஒத்துக் கொள்வதாகவும், அக்குறைகளைப் போக்க தாமும் தமது அரசும் முயன்று வருவதாகவும் கூறியிருக்கிறுர். அத்துடன் சிங்களர் களுக்கும், தமிழர்களுக்குமிடையில் வளர்ந்துள்ள பகையுணர்ச்சி நீங்க நல்லெண்ணங்களும், நன்னம்பிக்கைகளும் வேண்டுமென்றும் அதைத் தாம் உருவாக்குவதாகவும், ஆனுல் இடையில் சில 'விஷமிகள்' இதற்குத் தடையாக இருப்பதாகவும் சொல்லியிருக்கிறுர்.

இந்தச் செயவர்த்தன யார்? எத்தகையவர்? இவரது கட்சி எத்தகையது என்பதை சற்று தெரிந்து கொண்டால்தான் இவரும் இவரது அரசும் தமிழர்களின் குறைகளை, சிக்கல்களை எப்படித் தீர்க்கப் போகிறது? தீர்த்துக் கொண்டிருக்கிறது? இவர் கூறும் அந்த 'விஷமி(கள்)' யார் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

1944–இல் இலங்கை வெள்ளையரிடமிருந்து அரசியல் விடுதலை பெருததற்கு முன்பிருந்த சட்டமன்றத்திலேயே, தனிச்சிங்களம் மட்டுமே இலங்கையின் அரச கரும மொழியாக இருக்க வேண்டு மென்று தீர்மானம் கொண்டு வந்தவர் இந்தச் செயவர்த்தன.

1958–இல் தமிழர்களின் குறைகளுக்கும் சிக்கல்களுக்கும் ஓரளவு ஆறுதல் தீர்வுகாண உதவுமெனக் கருதப்பட்ட 'பண்டா—செல்வா' ஒப்பந்தத்தை எதிர்த்து இனவெறியைக் கிளப்பும் முழக்கங்களுடன் 'கண்டியாத்திரை' நடத்தி அவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தவர் இந்தச் செயவர்த்தன.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கூர்ந்து விரைவில், எம்மை மணந்து கொள்ளுதற்குரிய பொருளை ஈட்டிக் கொண்டு வந்து என்னை மணந்து கொள்வார்; எனவே, தோழி! நீ அவர் பற்றி ஐயப் படாதொழிக'—என்று தலைவி தெருட்டிக் கூறினுள் என்று கூறியதாகும் இப் பாடல்.

இது, பாலையென் திணையும், வரைவிடை வைத்த பிரிவின் ஐயுற்ற தோழியைத் தலைவி தெருட்டிக் கூறியது என்னுந் துறையுமாம். ○

1958-இல் நடைபெற்ற மாபெரும் இனக்கலவரத்திற்கு-தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்கு-மூலகாரணம் இவரின் இனவெறி முழக்கங்களே.

தமிழர்களின் சைவ, மாலியச் கோட்பாடுகளுக்கெதிராக பௌத்தமே அரசு மதமாக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தவர் இந்தச் செயவர்த்தன.

1977-இல் தீவு முழுவதும் தமிழ்மக்கள் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, நாடாளுமன்றத்திலேயே தமிழர் தலைவர்களைப் பார்த்துப், பொறுப்பற்ற முறையில், "நீங்கள் ஒரு போரை விரும்பினால் ஒரு போர் நடைபெறட்டும்; அமைதி என்றால் அமைதி நிலவட்டும். இது நான் சொல்வதன்று; சிறிலங்கா மக்கள் கூறுகிறார்கள்" என்று சொல்லி வன்செயல்களுக்கு—சிங்களரின் வெறியாட்டங்களுக்கு ஊக்கமளித்தவர் இந்தச் செயவர்த்தன.

1977-இல் நடைபெற்ற இன அழிப்புப் போரில் தமிழர்களுக்கு இலங்கையின் தலைநகரான கொழும்பிலேயே பாதுகாப்புக் கொடுக்க முடியாமல், தமிழர்களின் பரம்பரைத் தாயகத்திற்கு அவர்களை அனுப்பி வைத்தவர் இந்தச் செயவர்த்தன. இன்று தமிழர்களுக்கென்று பரம்பரைத் தாயகம் கிடையாது என்று சொல்லித் தமிழர்கள் நடுவில் தமிழர் நிலங்களில் மிகப் பெருமளவில் சிங்களக் குடியேற்றங்களை நடத்திக் கொண்டிருப்பவர் இந்தச் செயவர்த்தன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வெள்ளையரால் அழைத்துச் செல்லப்பட்ட-ஈழத்தைப் பொன் கொழிக்கும் நாடாக்கிய தமிழகத் தமிழர்கள் பல இலக்கம் பேர்களின் குடியுரிமையை நீக்கம் செய்ததும் ஒப்போலை உரிமையைப் பறித்ததும் இந்தச் செயவர்த்தனவின் கட்சி அரசுதான். அத்தமிழர்களை இன்றும் இங்கு அம்மணமாகத் துரத்திக் கொண்டிருப்பவர் இந்தச் செயவர்த்தன.

இப்படி இலங்கையில் தமிழினத்தைத் திட்டமிட்டுத் தீர்த்துக் கொண்டிருக்கிற செயவர்த்தனவுக்குத் தமிழகஅரசு மாபெரும் வரவேற்புக் கொடுத்துள்ளது. இலங்கைச் சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்களை நிரப்பி விட்டு வந்துள்ள செயவர்த்தனவுக்கு திரு. முத்தையா (செட்டியார்) பெரும் விருந்து அளித்துள்ளார். தமிழக மாண்புகளும் இதில் கலந்து கொண்டுள்ளன. சென்னையில் இப்பெருமகனார் வரவை யொட்டித் தமிழகக் காவல் துறையினர் முன்னெச்சரிக்கைச் சிறைப்பிடித்தம் வேறு நடத்தியுள்ளனர்.

'உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற காவலரும்' அவரது உடன் பிறப்புகளும் இதுபற்றி வாய்திறக்கக் காணோம். ஒருவேளை தாம் ஆளும் பொறுப்பில் இருந்தபோது செய்ததைத்தானே இப்போதிருப்பவர்களும் செய்கிறார்கள் என்று யாராவது கேட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தினாலா? தமிழகமே விழிப்பு எப்போது? விடிவு எப்போது?

—பூவைமேடு பரிமளாமணாளன்.

கிழக்கே போகும் (புகை)வண்டி.

தலைப்பைப் பார்த்தவுடன் இது 'கிழக்கே போகும் ரயில்' என்னும் திரைப்படத்தைப் பற்றிய ஆய்வுரை என்று தெரிந்திருக்கும். ஆம்! 'ரயில்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் 'வண்டி' என்ற சொல்லையே பயன்படுத்தியிருக்கலாம். [ஆங்கில நாட்டில் இப்படம் எடுத்திருந்தால் "Vandi, which goes to East" என்று எடுக்க மாட்டார்கள். நாமோ கிழக்கே போகும் 'ரயில்' என்று தலைப்பிடுகின்றோம். எனவே, தமிழ் வளர்க்க வேண்டும் என்று, படம் எடுத்த பாரதியரசு ('பாரதிராஜா'–என்றும் போட்டிருக்க வேண்டியதில்லை. மொழியில் மரபு பேணாத கண்ணதாசனே 'கவியரசு' என்று போடவில்லையா?–அது போல்) விரும்பியிருந்தால் போட்டிருக்கலாம்] 'வண்டி' என்பது சிற்றூர்ப் புறங்களில் இடமறிந்து பொருள்படும் சிறப்பு வழக்குச்சொல். அது தொடர் வண்டியையும் கட்டாயம் குறிக்கும். ஏனெனில் நல்ல தமிழனால் எடுக்கப்பட்ட படம் நல்ல தமிழையே தலைப்பாய்ப் பெற்றிருக்கலாமே எனும் ஆற்றாமை நமக்கு! இனி, படத்தைப் பற்றிச் சில சொற்கள்.

ஒரு சிற்றூர் முடிதிருத்துநன், முடிதிருத்தியே தன் மகனைப் படிக்கவைக்க, அவன் வேலையில்லாமல் பாட்டுகள் எழுதிக்கொண்டு திரிவதால் தந்தைக்கு மட்டுமின்றி ஊருக்கும் பகைவனாகிறான். இப்படியே அந்த ஊரின் சாதிக் கொடுமைகளையும், பார்ப்பனச் சூழ்ச்சிகளையும், மூடநம்பிக்கைகளையும் கருவாகக் கொண்டு கதை பின்னிச் செல்கிறது.

இயக்குநர் தம் முழு ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும் என்றே புதிய நடிகர்களாக அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பது விளங்குகிறது. பாடல்களை வேண்டுமென்றே நுழைத்து, அதற்கென்று கதையின் போக்கை வளைத்துச் சுவைஞர்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்காமல், பாடல்களை இயல்பான இடத்தில் அமைத்துச் செப்பம் செய்திருக்கிறார்.

ஒரு குறிப்பிட்ட செயலை வேறுபட்ட இருவரிடத்தும் ஏற்கின்ற கதை நாயகியை வெவ்வேறு உணர்ச்சியோடு நடிக்க வைத்திருப்பதும், ஓடும் தொடர்வண்டியில் காதலி ஏறக் காதலன் கை கொடுப்பதும் இயக்குநரின் திறமைக்கு எடுத்துக்காட்டுகள். ஒரு சிற்றூர்க் கதையை நகர மக்களுக்கும் காட்ட முடியும் என்பதை நிறுவுவதாகவே இயக்குநர் இக்கதையை இயக்கியுள்ளார் எனலாம். படக் கோப்பும் இதற்கு நன்கு துணை செய்திருக்கிறது.

படத்தில் கொச்சையான உரையாடல்களே இருந்தாலும் அவை சிற்றூர் உரையாடல்களாக இருப்பதால் இயல்பான நல்ல அரிய தமிழ்ச் சொற்கள் நடை போடுகின்றன. பிற மொழிச் செருகல் பெரும்பாலும் தவிர்ந்திருக்கின்றது. சோறு கொண்டு போகும் ஏனத்தைத் 'தூக்குவாளி' என்பதும் 'நிர்வாணம்' என்பதை 'ஒட்டுத் துணியும் இல்லாமல்' என்பதும் மொழி நலத்தைக் காக்கும் சொல்லாட்சிகள். பார்ப்பனக் குறும்புகளின் தலையில் ஆங்காங்கே குட்டுகள் விழுகின்றன. குலமுறைக் கல்வி (வரணாசிரம தருமம்) தகுந்த இடத்தில் வைத்துத் தகுந்த விளக்கத்துடன் இடிக்கப்படு கிறது. மழை பெய்வதை நிறுத்தச்செய்யும் சடங்கைப் பகடியாகத் தொடங்கி அதன் கொடுமையைப் பார்ப்பவர்களின் உள்ளத்தில் ஆழப் பதியவைக்கும் வண்ணம் கதையோடு சேர்த்துப் பாய்ச்சி விடுகிறார், இயக்குநர்.

மொத்தத்தில் படம் மிக உயர்ந்த தரம்! படப்பிடிப்பு, எடுப்பு, உரையாடல், பாடல்கள், வண்ணம், கதையமைப்பு, நடிப்பு எல்லாம் அகர முதல் (A one)! தமிழனுக்கு வாய்ப்பிருந்தால் அறிவையும் கலையையும் பயன்படுத்திச் சற்றுப் புரட்சியும் சேர்த்து உயர்ந்த மேம்பட்ட திரைப்படத்தை எடுக்கமுடியும் என்பதற்கு இப்படம் மலை மேல் விளக்கு! தக்கச் சான்று! படப்பிடிப்புத்துறையைப் 'பாரதி யரசும்' இசையமைப்புத் துறையை 'இளையவரசும்' கைப்பற்றி யுள்ளது தமிழினத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி!

தூய தமிழ்ப்பண்பு கமழக் கமழ இப்படம் வெளிவந்திருக்கிறது. படத்துறையில் இரண்டு 'அரசு'களும் தமிழர்களுக்குத் கிடைத்த இரண்டு கண்கள்! அத்தனைத்தமிழர்களும் பார்த்து வியந்து போற்றிப் பாராட்ட வேண்டிய படம் இது. தமிழன் முன்னேறி வருவதை இப்படம் காட்டுகிறது' தமிழ் முன்னேறவும் சில முயற்சிகள் எடுக்க வேண்டும்! இரண்டு அரசுகளும் இனி அதிலும் முனைப்புக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

—குன்றன்

போர்த்துக்கீசிய சொற்கள்!

யாழ்ப்பாணத்தில் Bench, Table, Chair என்னும் ஆங்கிலச் சொற்களுக்கு; வாங்கு, மேசை, கதிரை என்னும் சொற்களைத் தமிழர்கள் வழங்கி வருகின்றனர். ஆனால் இச்சொற்கள் போர்த்துக் கீசியச் சொற்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. இவற்றிற்கு நேரிய தமிழ்ச் சொற்கள் விசி, மிசை, நாற்காலி என்பவையாகும். ○

செய்திகள்

1. அண்ணு பிறந்த நாள் விழா—வீரப்பன்சத்திரம்:

சென்ற துலை 5 (22-10-78) ஞாயிறு காலை 10-30 மணியளவில், ஈரோடு வீரப்பன் சத்திரம், திரு. வி. க. மன்றச் சார்பில் அண்ணு பிறந்த நாள் விழா கொண்டாடப் பெற்றது. அன்று அரசியல் கட்சிகள் செய்த பொதுக் கடையடைப்பை முன்னிட்டு, விழாவில் கலந்து கொள்ள விருந்தவர்கள் பலரையும் காவல் துறையினர் கையடைப்படுத்தி யிருந்தனர். இருந்தும் விழா பாவலரேறு. பெருஞ் சித்திரனுர் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. விழாவில் கலந்து கொண்டு, 'பேரறிஞர் அண்ணுவின் பெருவாழ்வு' என்னுந்தலைப்பில் திருவாளர்கள் புலவர் இறைக்குருவனுர் (உ.த.க. பொதுச் செயலாளர்: சென்னை.) கல்வெட்டறிஞர். புலவர். செ. இராசு. க. இலக்., பேரா. மு. ச. சிவம். க, மு., பாலலர். குமர. நடவரச ஈவப்பனுர் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். திரு. வீ. சு. இளம்பரிதி (செயலர். திரு. வி. க. மன்றம்) வரவேற்புரையாற்றினுர். இறுதியில் தலைவர் அவர்கள் மிக விரிவாகவும் விளக்கமாகவும் அண்ணு அவர்களைப் பற்றியும் பெரியார் அவர்களைப் பற்றியும் உணர்வுரையாற்றினுர்கள். இறுதியில் திரு. சே. சு. அன்பரசு (தலைவர் திரு. வி. க. மன்றம்) அவர்கள் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

2. தமிழ் மாநில மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு—ஈரோடு:

ஈரோடு பெரியார் மன்றத்தில், கடந்த 22-10-78 ஞாயிறு, தமிழ் மாநில மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் சாரபில் நடந்தது. காலையில் மாணவர்கள் கருத்தரங்கம், பேச்சுப் போட்டி ஆகியவை நடந்தன. மாலை பொது மாநாட்டில் அனைத்துக் கட்சிச் சார்பிலும் பேராளர்கள் தலைவர்கள் கலந்துகொண்டு இந்தித் திணிப்பை எதிர்த்துக் கருத்துரையாற்றினர். இறுதியில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சிச் சார்பில் திரு. தா. பாண்டியன் க.மு., ச,இ அவர்களும் எழுத்தாளர்கள் சார்பில் சிறு கதை ஆசிரியர் த. செயகாந்தன் அவர்களும், இதழாசிரியர்கள் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினுர்கள். திரு. பாண்டியன் அவர்கள் தம் சொற்பொழிவில், தாம் முன்னைய நாள் வரை என்ன கொள்கை பற்றி எழுதியிருப்பினும், பேசியிருப்பினும் இனி, வட நாட்டினர் இந்திப்பரப்புதலை நீக்கிக் கொள்ளவில்லை யென்ருல் தனித்தமிழ் நாடு பிரிந்தே ஆகவேண்டும் என்றும், தமிழர்கள் அனைவரும் தாய்மொழிப் பற்றுக் கொள்ள வேண்டும் என்றும், உலகில் தாய்மொழியைப் பேணுத இனம் தமிழினம் ஒன்றே என்பதைத்தாம் வெளிநாட்டுச் சுற்றுச் செலவின் பொழுது உணர்ந்து கொண்டதாகவும், உணர்வு படப் பேசியது குறிப்பிடத்தக்கது. இப்பேச்சு இவர்க்கு முன் பேசிய பாவலரேறு

அவர்களின் தமிழக விடுதலையை வற்புறுத்திய பேச்சை அரண் கட்டிப் பேசுவதாயிருந்தது கண்டு அனைவரும் வியந்தனர். இறுதியில் திரு. செயகாந்தன் அவர்களும் பேசினுர். மாநாடு இரவு 10-30 மணியளவில் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்துடன் இனிதே நிறைவுற்றது.

3. ஈரோடு, அனைத்துலக இளைஞர் மன்ற (JAYCEES) நிகழ்ச்சி:

கடந்த 23-10-78 திங்கள் மாலை 7 மணியளவில், ஈரோடு அனைத்துலக இளைஞர் மன்றத்தில், சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று நடந்தது. நிகழ்ச்சியில் சிறப்புச் சொற்பொழிவாளராகப் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் கலந்து கொண்டு ‘தமிழினம்-நேற்று-இன்று-நாளை’ என்னுந் தலைப்பில் அரியதொரு கருத்துரை யாற்றினுர், நிகழ்ச்சியை தென்மொழியன்பர். திரு. துரை. செல்வமகன் (சம்பத் குமார்) ஏற்பாடு செய்திருந்தார்.

4. ஈரோடு தென்னிந்தியத் திருச்சவை உயர்நிலைப்பள்ளி. (C.S.I) இலக்கிய மன்ற நிகழ்ச்சி:

கடந்த 24-10-78 காலை 9-30 மணியளவில், ஈரோடு தென்னிந்தியத் திருச்சவை உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்றத் தொடக்க விழா நடைபெற்றது. புலவர் திரு. இரா. சி. சென்னியப்பன் அவர்கள் வரவேற்புரை யாற்றினுர். துணைத் தலைமையாசிரியர் திரு. பி. எசு. தங்கத்துரை அவர்கள் தலைமை தாங்கினுர். திருவாளர்கள் புலவர் இறைக்குருவனுர், பாவலர். குமர நடவரச ஈவப்பனுர் அவர்களின் உரைக்குப்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் சிறப்புரையாற்றினுர். மாணவர்கள் மிக அமைதியுடனிருந்து ஒன்றரை மணி நேரச் சிறப்புச் சொற்பொழிவைச் செவிமடுத்தனர். இறுதியில் ஆசிரியச் செயலாளர் திரு. செ. செயச்சந்திரன். க.இ. நன்றியுரை கூறினுர். நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

5. தமிழக தமிழீழ நட்புறக்கழகம், சென்னை:

சென்ற 29-10-78, சென்னை நடுவண் நூலகத்தில் மாலை 7-மணியளவில், தமிழக தமிழீழ நட்புறக் கழகத்தின் சார்பில் சிறப்பு நிகழ்ச்சியொன்று நடந்தது. நிகழ்ச்சிக்கு உயர்திரு. பர். இரா. இளவரசு க.மு. (தலைவர். தமிழகத் தமிழீழ நட்புறவுக் கழகம்) அவர்கள் தலைமை தாங்கினுர். புலவர் திரு. தமிழ்நாவன் அவர்கள் ஈழத்து எழுத்தாளர் திரு. க. நவசோதி க.மு. அவர்களின் ‘இலக்கிய மகளிர் இதய வேட்கை’ என்னும் நூலை அறிமுகப்படுத்தி, அதன் சிறப்பியல்கள் பற்றி உரையாற்றினுர். அதன்பின் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் ‘ஈழத் தமிழரின் இன்றைய நிலை’ என்பது பற்றி அரியதோர் உணர்வுரை யாற்றினுர். இறுதியில் திரு. அரு. கோபாலன் (அமைப்பாளர் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், இந்தியக்கிளை) அவர்கள் நன்றியுரை யாற்றினுர். இரவு 9-30 மணியளவில் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

பிற செய்திகள்.

1. திருச்சி சூடாமணி-ஈகவரசன் பெற்ற 'தென்மொழிச் செல்வி' வாழ்க:

திருச்சி. பாரத மிகுமின் தொழிலக எழுத்தரும், நெடுநாளையத் தென்மொழியன்பரும் முகவரும் ஆகிய திரு. குழந்தை-ஈகவரசன் அவர்களின் துணைவியார் திருவாட்டி. சூடாமணி ஈகவரசன் அவர்களுக்குக் கடந்த 17-10-78-ஆம் பக்கல் பிறந்த பெண்மகவுக்குத் தென்மொழிப் பொறுப்பாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தென்மொழிச் செல்வி என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி இதழ் வளர்ச்சிக்கென உருபா பத்து அன்பளிப்பாக அளிக்கப்பெற்றது. குழந்தை தென்மொழிச் செல்வி எல்லா நலமும் வளமும் பெற்று வாழத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

2. சரோசா—காளியரசன் வாழ்க!

தென்மொழிப்புலவர் திரு. இலமா. தமிழ்நாவன் அவர்களின் தங்கையும், திருத்தண்கால் திரு. பெ. மாலை அவர்களின் திருமகளும் ஆகிய செல்வி. நன்முளரி (சரோசா) அவர்கட்கும், திருவில்லிப் புத்தூர் திரு. வீ. சுப்பிரமணியனார் அவர்கள் திருமகன் நம்பி காளியரசனுக்கும், கடந்த மடங்கல் 19 (4-9-78)ஆம் நாளன்று, திருத்தண்கால் நெடுமால் கோவிலில் உள்ள செந்தாமரைத் தாயார் திருமுன் திருமண விழா இனிதே நடைபெற்றது. திருமண நினைவாகத் தென்மொழி இதழ் வளர்ச்சிக்கு உருபா 10 நன்கொடையாக அளிக்கப் பெற்றது. மணமக்கள் நீடுழி வாழ்ந்து பல்லாற்றானும் சிறப்புற்று விளங்கத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

தென்மொழி மறவர்கள் கவனிக்க.

தென்மொழித் தமிழர் நல இயக்கச் சார்பில் விரைவில் நடைபெற விருக்கும், வானொலி நடைமுறை எதிர்ப்புப் பேராட்டம், விளம்பரப் பலகைத் தமிழ்ப் படுத்தப் போராட்டம், இந்திப் பரப்பு நிலையங்கள் முன் மறியல், வேத எரிப்புப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் கலந்து கொள்ள துணிவும், கொள்கையுரமும் கொண்ட தென்மொழி அன்பர்கள் தமிழன்பர்கள் ஆகியோர் தங்கள் ஒப்புதல் மடலுடன் முழு முகவரிகளையும் உடனே, 'அமைப்பாளர், போராட்டக்குழு, மே/பா. தென்மொழி, சென்னை-5 என்னும் முகவரிக்கு விடுத்துப் பதிந்து கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். போராட்ட அமைப்புக் கூட்டம் விரைவில் சென்னையில் நடைபெறும். மற்ற விளக்கங்கள் பின்.

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்:

மருத்துவ அறிஞர்: கோ. கோவிந்தனுர்.

8. பாலுணர்வுக் கருவியும் அதன் தன்மைகளும்.

ஒரு தன்மையின் குறைபாடுகளை ஆராய்வதற்கு முன்னுல், அத்தன்மையின் இயற்கைக் குணம் என்ன என்பதை அறிதல் சால சிறப்புடைத்து. அதனுல் ஆண்தன்மையின் குறியீடான, ஆண் குறியைப் பற்றியும் அதன் வேலைகளைப் பற்றியும், பால் உணர்ச்சி செல்லும் வழிகளைப் பற்றியும் சிறிது ஆராய்வோம்.

மூளையின் ஒரு நடுப் பகுதியிலிருந்து பால் உணர்ச்சி பிறக்கின்றது. இந்த நடுவம் பெருமூளையின் வெளிப்புறத்தில் உள்ள சாம்பல் நிறப்பகுதியில் அமைந்துள்ளது. ஆனுல் குறிப்பிட்டு, மூளையில் இந்த இடம்தான் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. மாந்தனுக்கு மாந்தன் இந்த இடம் மாறுபடுகின்றது. உடலின் வேறு சில உறுப்புகளின் வேலைகளால் பால் உணர்ச்சி மாறுபடலாம். உள்ளத்தின் தன்மையாலும் பால் உணர்ச்சி மாறக் கூடியதே. கற்பனை உலகில் உலவுபவர்கள், பொது மாந்தர்களைவிட மிகுதியான பால் உணர்ச்சி உடையவர்கள். உடலில் உள்ள சுரப்பிகளால், குறிப்பாக 'எண்டோ கிரைன்' அல்லது தூம்பற்ற சுரப்பிகளால் பால் உணர்ச்சி கட்டுப் படுத்தப் படுகின்றது. இச் சுரப்பிகளிலிருந்து நீர்கள் சுரக்கப்பட்டு, நேரே குருதியிலோ அல்லது நிணநீரிலோ கலக்கின்றன. இச் சுரப்பிகளுக்கும் பால் உணர்ச்சிக்கும் உள்ள தொடர்பைப் பின் விளக்குவோம்.

9. ஆண்மைத் தன்மையின் தோற்றமும் முதிர்ச்சியும்:

மாந்தனுக்கு மாந்தன் பால் உணர்ச்சியின் அளவு மட்டும் மாறுபாடு உடையது என்பது அன்று. அதன் கால அளவும், இந்த அகவை வரைதான் பால் உணர்ச்சி உச்சநிலையில் இருக்கும் என்ற தன்மையும் மாறுபாடு உடையன. அகவை ஆக ஆக அலித்தன்மை இயற்கையாகவே வந்தடைகிறது. ஆனுல் மாந்தர்கள் எல்லாருக்கும் ஒரு குறிப்பிட்ட அகவையில்தான் அலித்தன்மை உண்டாகிறது என்று சொல்ல இயலாது. ஆண்மை உடையவனுக அஃதாவது பெண்ணுெடு சேரும் ஆற்றல் உடையவனுக, ஓர் ஆண் அவனுடைய பதினுருவது அகவையில் வன்மை பெறுகின்ருன். இக்காலத்தில் தான் ஆண் வளர்ச்சி அடைந்த இளைஞனுகக் கருதப்படுகிருன்.

இந்தக் கால அளவு பதினாறு அகவைக்கு, அந்தப் பக்கம், இந்தப் பக்கம் இரு ஆண்டுகள் வேறுபாட்டில் இருக்கலாம். இது கருதித் தானோ நம் முன்னோர், கழகக்காலச் சான்றோர், மணமகனுக்குப் பதினாறுவது ஆண்டைச் சரியான அகவை என உறுதி செய்தனர் போலும்! ஓர் இளைஞன் ஒளிநீரை (விந்துவை) வெளியேற்ற ஆற்றல் பெறுவதற்கு முன்பாகவே, புணர்ச்சி செய்ய ஆற்றல் உடையவனாக இருக்கிறான். அஃதாவது ஒளிநீர் (விந்து) ஏற்படுவதற்கு முன்பே ஆண்மைத்தன்மை ஏற்பட்டு விடுகிறது. இளைஞன் முதிர்ந்து மாந்தனாக ஆகும் பொழுதுதான் ஒளிநீர் சுரக்கின்றது. இளைஞனின் ஆண்மைத்தன்மை விரைவாக வளர்ந்து கொண்டே சென்று அவனுடைய இருபத்தைந்தாவது அகவையில் உச்சநிலையை அடைகின்றது. நாற்பதிலிருந்து ஐம்பதுவரை அதே உச்சநிலையில் நிற்கின்றது. பின் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்குகின்றது. மாந்தனின் ஆண்மைத்தன்மை அகவை ஆக ஆக மிக மெதுவாகவே குறைகின்றது. அறுபது, எழுபது அதற்கும் மிகுந்த அகவை உள்ளவர்களுக்குக் கூட ஆண்மைத்தன்மை முற்றிலும் நீங்கி விடுவதில்லை. பொதுவாக அறுபத்தைந்தாவது ஆண்டில் ஆண்களுக்கு ஆண்மைத்தன்மை பெரும்பான்மையாக நீங்கி விடுகிறது எனக் கொள்ளலாம். நாம் இங்குக் கூறியது பொதுப் படையாகத்தான். நாற்பத்தைந்தாமாண்டில் ஆண்மைத் தன்மையே இல்லாத கிழவர்களையும், தொண்ணூறும் ஆண்டில் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்து உலகிற்கு வழங்கும் இளைஞர்களையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

10. பால்உணர்வு எங்கிருந்து தோன்றுகிறது?

பால் உணர்ச்சி மூளையின் ஒரு நடுவிடத்திலிருந்து பிறக்கின்றது என்பதைப் பார்த்தோம். பால் உணர்ச்சி மிகச் சிக்கல் நிறைந்தது. இவ்வளவு சிக்கல் நிறைந்த ஒன்று ஒரே நடுவத்திலிருந்து மட்டும் பிறக்க முடியுமா என்ற ஐயம் எழுகின்றது. புணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் பிற நடுவங்களும் உள்ளன. இணைய வேண்டும் என்ற நோக்கம், மனதில் எழும் அவாவாலும், வெளியிலிருந்து வரும் கிளர்ச்சிகளாலும் உண்டாகலாம். தான் விரும்பிய பெண்ணைப் பார்ப்பதாலோ, 'அவளுடன் பக்கத்தில் இருப்பதாலோ, ஆடையற்ற பெண்களின் ஓவியத்தைப் பார்ப்பதாலோ வெளிக் கிளர்ச்சிகள் உண்டாகலாம். உள் கிளர்ச்சியின் நடுவமும் வெளிக் கிளர்ச்சியின் நடுவமும் மூளையில்தான் அமைந்துள்ளன. ஆனாலும்

புணர்ச்சியை வெற்றியுடன் நிறை வேற்ற பிற நடுவங்களின் ஒத்துழைப்பும் வேண்டற்பாலது. புணர்ச்சியில் ஆண்குறியின் எழுச்சியைக் கட்டுப் படுத்தும் நரம்பு நடுவம் மிக முதன்மையான தாகும். இந்த நரம்பு நடுவம் முதுகுத் தண்டின் 'லம்பார்' பகுதியில் அதாவது முதுகின் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கிறது. இவ்விடத் திலேயே ஒளிநீரை வெளியேற்றும் நடுவமும் அமைத்திருக்கின்றது. இந் நடுவங்கள், தங்களுக்குள் ஒற்றுமையுடன் இணைந்து வேலை செய்கின்றன. ஆனாலும் அவை தனித்தனி நடுவங்களே. ஒன்றி லிருந்து மற்றொன்று தனியாகவும் இயங்க வல்லது வெளிக்கிளர்ச்சி யைப் பொறுத்த மட்டில்.

11. பால்உணர்வு எழுச்சியும் துவட்சியும்.

எழுச்சி நடுவம் மூளையின் ஆளுகைக்கு உட்பட்டது. கலவி உறுப்புகளிலிருந்து, (குறிப்பாக ஆண்குறி, வித்துப்பை இவற்றி லிருந்து) வரும் கிளர்ச்சிகளினாலும், அல்லது உடலில் பால் உணர்ச்சி உடைய எந்த இடத்திலிருந்தும் வரக்கூடிய கிளர்ச்சிகளினாலும் எழுச்சி நடுவம் வேலை செய்யத் தொடங்கு கின்றது. இக்கிளர்ச்சிகள் எழுச்சி நடுவத்தின் வழியாகக் கடத்தப்பட்டு, தனிநரம்புகள் மூலம் ஆண்குறியை அடைகின்றன. ஆண்குறிக்கு மிகுந்த குருதி வந்து சேர்வதால், அஃது உப்பிப் புடைக்கின்றது. எழுச்சி அடைந்த ஆண்குறி பெண்குறியின் உட்சென்ற உடன், அந்த ஆண் வன்மை யான கிளர்ச்சிகளுக்கு ஆள் ஆகின்றான். அக்கிளர்ச்சிகள் கடத்தப் பட்டு, முதுகுத் தண்டிலுள்ள எழுச்சி நடுவத்தை அடைகின்றன. இவ்வாறாக வந்த கிளர்ச்சிகள், ஆண்குறியின் எழுச்சியை ஒரே நிலையில் இருக்கும்படி செய்யவோ அல்லது கூட்டவோ செய்கின்றன. இங்ஙனம் எழுச்சி நடுவத்தில் கிளர்ச்சிகள் புணர்ச்சியின் போது குவிந்த வண்ணம் இருக்கின்றன. வேண்டுமளவு கிளர்ச்சிகள் குவிந்த உடன், அந் நடுவத்திலிருந்து கிளர்ச்சிகள் வெளித்தோன்றி தள்ளு நடுவத்தைத் தாக்குகின்றன. விரிந்து சுருங்கும் தசைகளின் தன்மையால் ஆண்குறியிலிருந்து ஒளிநீர் வெளியேறுகிறது. அப் பொழுது புணர்ச்சியால் உண்டாகும் இன்பம் உண்டாகிறது. ஒளிநீர் வெளிப்பட்ட பின், எவ்வகைக் கிளர்ச்சியும் எழுச்சி நடுவத்தை அடைவதில்லை. ஆகவே ஆண்குறியின் எழுச்சி நீங்கி, துவண்டு போகின்றது. துவள்வதற்குக் களைப்பும் ஒரு காரணமாகும்.

இஃது என்ன ஒரு பெரிய சிக்கலான செய்கை போலும் என நினைக்கத் தோன்றுகின்றதன்றோ? (தொடரும்)

அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு.

நூல்: **புலால் தின்பது தீவினையா?**
(தொகுப்பாசிரியர்: **திரு. முரு. பழ. இரத்தினம்**
வெளியீடு: **மறைமலையடிகள் மறம், புன்செய்ப் புளியம் பட்டி, கோவை மாவட்டம்:** விலை: **உருபா 8**

ஊன் உண்டலின் தீங்குகளை யெல்லாம் வினு-விடைகள் வழியாக விளக்கிக் கூறுவதே இந்நூலின் நோக்கம். 148 வினுக்களும் அவற்றிற்குரிய விரிவான விடைகளும் அடங்கியுள்ள இந்நூல் ஊன் வெறுப்பார்க்கு உற்றதொரு கருவூலமாய் இலங்கும். திருவள்ளுவர், சிவநெறிக் குரவர்கள், தாயுமானவர், இராமலிங்க அடிகள், சாந்தலிங்க அடிகள், காந்தியடிகள், வீரமாமுனிவர் முதலான அருளாளர்கள் புலால் உண்ணுதலை எங்ஙனம் கடிந்தொதுக்கினர் என்பவற்றை இந்நூலில் பரக்கக் காணலாம்.

இந்நூல் நுவலும் அருங்கருத்துகளில் சில: “ஊன் உண்ணுதார் உடம்பு தூயனவாய், நோய் அணுகாதனவாய், எத்தகைய வருத்தமான தொழில்களையும் செய்து முடித்தற்கேற்ற வலிவு வாய்ந்தனவாயிருக்கும் (பக்: 20); ஊன் உண்ணுத விலங்குகள் மிகுந்த வலிவுடையன (பக்:22); புலால் உண்போரே நீரிழிவு நோய்க்கு மிகுதியும் ஆளாகின்றனர். (பக்: 48); ஊனுணவில் விருப்ப முடையார்க்குத் தவம் புரியும் மனஒருமைப்பாடு உண்டாகாது (பக்: 94).

‘ஊன் உணவையே மிகுதியாய் உண்பவர்கள் நீண்ட நாள் பிழைத்திரார்; உயிரோடிருக்கும் சில நாள்களும் நோய் கொண்டு துன்புறுவர், (பக்: 24) என்ற கூற்றில் ‘மிகுதி’ என்ற சொல்லிற்கு முதன்மை யிருப்பின், ஊனிலாத உணவை மிகுதியாய் உண்பாரும் நோய்க்கிரையாகிக் கழிவராதலின் பொதுவாக மீதூண் விரும்புதலின் தீங்கினையே எடுத்துக் கூறுவதாகும். அன்றி, ஊன் உண்பவர் நீண்ட நாள் பிழைத்திரார் என்ற கூற்று உண்மைக்கு முற்றிலும் ஒத்த கருத்தன்று. புலாலுணவை உண்டு வந்த தந்தை பெரியார் அவர்கள் நிறைநாள் வாழவில்லையா? புலாலுணவு கொள்ளாதவர் நோய்வாய்ப் படுவதே யில்லையா என்று கேட்கத் தோன்றுகிறது.

ஊனுணவு உண்ணும் அரிமாவினும் யானை வலுவுள்ளது என்று கூறுவது (பக்: 25) 'யானை வெரூஉம் புலிதாக்குறின்' என்ற குறட் கருத்துக்கு முரணுயுள்ளது. 'ஊனுணவு கொள்வார்கு நுண்ணுணர்வும் பேரறிவும் இல்லாமற் போவதோடு உடம்பும் பொலிவிழந்து போகின்றது' என்ற கருத்து (பக்: 14) இதுவரை தோன்றிய அறிவியலறிஞர்கள் புலாலுண்டவர்களே என்பதை ஏற்கமறுக்குமா?

புத்தர் பெருமான் பன்றியிறைச்சி உண்டதும் அன்றைக்கே உயிர் துறந்தார். (பக்: 8) என்ற செய்தி பன்றியூன் தின்னும் பல்லாயிரம் மக்களை அச்சுறுத்துவது போல் அமைந்துள்ளது. (புலால் உண்ணுமலிருந்து ஒரு முறை உண்டதன் விளைவாக அஃது இருக்கலாம்) "இறைச்சி உண்போர் மற்றவர்களோடு அன்புடன் அளவளாவிப் பயன்படும் தொழில்களையும் செய்ய மாட்டார்" (பக்:93) என்ற கூற்று உலகியலொடு பொருந்துவது அன்று.

சமையங்களின் வழி நின்று புலால் தின்பது (பாவம்) தீவினை (அல்)கரிசு என்று இந்நூல் பெரிதும் வற்புறுத்துகிறது. எண்ணிலாத மேற்கோள்களைக் காட்டும் இந்நூலில் 'ஊனெடுண்டல் தீதென, ஊனெடுண்டல் நன்றென' என்று சைவருள் இருவகைப் பட்ட கருத்தினர் இருந்தனர் என்று திருஞானசம்பந்தர் கூறிய செய்தி இந்நூலின்கண் எவ்வாறே விடப்பெற்றுள்ளது. இவ்வுலகில் நூற்றுக்குத் 95 விழுக்காட்டுக்கு மேல் மக்கள் ஊனுணவை, நாள்கள் இடையிட்டாயினும் உண்டு வருகின்றனர். உணவுப் பழக்கம், வெப்ப தட்பநிலை, உண்பொருள் கிடைக்கும் வாய்ப்பு, உடலுக்கு மாறுபாடின்மை இவற்றை ஒட்டி ஓரளவாயினும் ஊன் கலவாதுண்டல் இயலாத தொன்றுயினும் முடிந்தவரை ஊனை விலக்குதல் பொதுவில் யாவர்க்கும் நன்றும் என்பதே எம்கருத்து'

—பேரா. சிவம். க.மு.

நூல்: **பாவலர் போற்றும் பாவேந்தர்.**

தொகுப்பாசிரியர்: **புலமைதாசன்,**

பதிப்பு: **புலமைப் பதிப்பகம், 2. ஏ, பார்த்தசாரதி சாமி சந்து, சென்னை-5.**

விலை: உருபா: **3-50** பக்கம்: **104.**

86 பாவலர்கள் பாவேந்தரின் தமிழ்ப் பணியைப் பாராட்டிப் பாடிய பாடற்றெகை நூலிஃதாம். பாவேந்தரைப் பாடுவோர் தமிழ் மரபு, தமிழிலக்கண நெறியை மதித்துப் பாடுதல் வேண்டும்.

"எவ்வாறு பார்த்தாலும் இவர்க்கு ஈடு இவரேதான்" (ப: 22) எண்ணும் பாடலில் குற்றியலுகரப் புணர்ச்சிப் பிழையுள்ளதே. "எவ்வாறு பார்த்தாலும் இவர்க்கீ டு—?"' எனச் சீர்க்குறை நேருகிறதே!

பெரியாரின் பண்பு நலன்கள்.

—மறை திருநாவுக்கரசு

6: *சிறையில் குற்றவாளிகளிடம் ஆறுதலாகக் கூறியது.*

சிறைச் சாலையில் இருக்கும் பொழுது, அங்கிருந்த ஏழைக் குற்ற வாளிகள் இவருடைய மீசை தாடியைப் பார்த்து இவர் ஒரு துறவியார் (சாமியார்) என்று நினைத்துக் கொள்வார்கள். எனவே அவ்வப் பொழுது அவர்கள் வந்து இவர் கால்களில் விழுந்து கும்பிட்டு, 'ஐயா! பெரியவரே! சாமி! நாங்கள் ஏதோ பெரிய தீவினை (பாவம்) பண்ணிவிட்டு, சிறையிலே வந்து சேர்ந்திருக்கிறோம்; எங்களுக்கு மன்னிப்பு உண்டா?, கடவுள் எங்களது தீவினையை (பாவத்தை) நீக்குவாரா? நீங்கள் எங்களுக்கொரு நல்லவழி காட்ட வேண்டுமென்று கேட்பார்கள். அப்பொழுது இவர் நிரம்ப மனம் உருகி, அவர்கள் மனம் கொள்ளுமாறு, சொல்லுவது போல் பேசுவார். 'என்னப்பா, எல்லாவற்றிலும் நம்ம செயல் என்ன இருக்கிறது; நீங்களா தப்புச் செய்தீர்கள்? எல்லாம் உள்ளே இருந்து கொண்டு நம்ம தீவினை (பாவம்) நல்ல வினைகளுக்கு (புண்ணியங்களுக்கு) ஏற்றபடி நம்மைக் குற்றங்களைச் செய்யச் சொல்கிறான். அவற்றை யெல்லாம் குற்றமென்று சொல்ல முடியாதப்பா! அவன்தானே நம்மை யெல்லாம் ஏவுகிறான்'' என்பார். உடனே அந்தக் குற்ற வாளிகளெல்லாம், 'சாமி! சாமி! ஆமாம்! ஆமாம்! நீங்கள் சொல்லு கிறதெல்லாம் சரி! 'என்று கண்ணீர்மல்கச் சொல்லுவார்கள். அதற்கு அவர் மீண்டும், 'வருத்தப்பட வேண்டா'ம்பா; மக்களாப் பிறந்தால் நல்வினை தீவினைகளை நிறுத்த முடியுமா? எல்லாம் என்ன? எல்லாம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

''யாவுமுனைக் கற்றதனுல் பெற்ற பேறே!'' என ஈற்றடி (ப: 23) அமைந்திருத்தல் வேண்டும். புகழ் மிக்கார் எனப்படுவோர் பாடலி லேயே இனைய வழுக்கல் எனில், பிறர் பாக்கள் பற்றிக் கூறல் வேண்டுமோ?

சில தொடர்கள், அடிகள், சில பாக்கள் நன்று. எனினும், தமிழாக்கம் கருதியே தொகை நூல்கள் உருவாதல் இன்றியமையாத தாகும்.

பாவேந்தரைப் போற்றுங் குறிக்கோளையும், அந்நல்லுணர் வுடையாரையும், பாராட்டுகிறோம். பாவேந்தர் இந்நூற்றாண்டில் தமக்கீடில்லாப் புலவராதலை விளக்கும் இந்நூல், தமிழின உணர் வூட்டுந்தகையது. ஆதலின் மீண்டும் பாராட்டுகிறோம்.

—புலவர்க்கினியன்.

நம்ம தலையெழுத்து அந்தத் தலையெழுத்தக் கூட அந்த முருகன் தானே நம்முடைய தலையிலே போட்டிருக்கிறான். அவனை மட்டும் மறக்காதே! அவனைக் கும்பிட்டுக் கொண்டு இரு. இறுதியிலே நம்முடைய தீவினை-யெல்லாம் துன்பத்தை யெல்லாம் நீக்குவான்" என்று சொல்லுவார். அவர்கள் மனம் அமைதியடைந்து போவார்கள்.

ஆனால், அப்பொழுதெல்லாம் அவர் அருகில் இருக்கும் நான் சிரித்துக் கொண்டு அவரிடம் அவர்கள் முன்னர் ஒன்றும் சொல்ல மாட்டேன். அப்புறம் அவர் என்னிடம் சொல்லுவார். 'அந்த அறிவில்லாதவர்களிடம் நாம் போய், ,சாமியில்லே; பூதமில்லே' என்று சொன்னால், அவர்கள் இன்னும் கொஞ்சம் வருத்தப்படு வார்கள். அந்த நிலைகளை இப்பொழுதெல்லாம் அவர்களிடம் விளக்க முடியுமா? ஏதோ அவர்கள் துயரங்களை வந்து நம்மிடத்திலே சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஓர் ஆறுதல் சொல்லுவோம் என்ற எண்ணத்திலே, சொன்னேன்' என்று.

இதையெல்லாம் நினைக்கையில் அவர்கள் மற்றவர்கள் மனம் மகிழ வேண்டும் என்பதற்காகச் சில சூழ்நிலைகளில் எத்தகைய பண் பாட்டோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையறிந்து வியக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு அவரிடம் நான் கண்ட பல நலன்களுள் இன்னும் ஓரிரண்டையும் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

7. சிறையில் மற்ற கட்சிக்காரர்கள் அவமதித்த பொழுதும் வருந்தாமலிருந்தது.

சிறையில் அவர்கள் இருந்த பொழுது, ஒருநாள் அவர்கள் அறையில் ஒரு தாள் உறையில் யாரோ, அவர்களுடைய முகமயிர், கால்மயிர்களை யெல்லாம் மழித்துப் போட்டுப் பொட்டலமாக மடித்து ஒருவன் வீசியெறிந்துவிட்டுப் போய்விட்டான். ஆனால் அது போடப்படும் பொழுது அதை நாங்கள் பார்க்கவில்லை.

பெரியார் அதை எடுத்துக் கொண்டு வந்து, 'சாமி! பார்த்தீர் களா; எனக்கு இங்கொரு பெரிய மதிப்பு (மரியாதை) கிடைச்சிருக்கு, என்று சொல்லி அதைப் பிரித்து, அதிலேயிருக்கும் முடியெல்லாம் காட்டிவிட்டுப் பின்வருமாறு 'என்னவோ, போகட்டும்! என்மேலே

அவர்களுக்கு வெறுப்பு; அதனுலே என்னை இப்படி அவமதிக்கிருர்களாம். இந்த வகையிலாவது அவர்கள் மகிழ்ச்சியாயிருந்து விட்டுப் போகிருர்கள்.' என்று சொன்ஞர்கள். அதன் பொருட்டு அவர்கள் கவலைப் படவில்லை. வருத்தமும் படவில்லை. பெரிய தலைவர்கள் அப்படித்தானே இருக்க முடியும். அதுபோல விருப்பு வெறுப்பற்று, உண்மையை உணர்ந்து, சூழ்நிலைகளுக் கேற்ப மனப்பான்மையை அமைத்துக் கொள்ளுகின்ற அவருடைய சிறந்த தன்மை இதனுல் விளங்குகிறது. அந்த மனப்பாங்கில்தான் அவர்கள் அவர்கள் மேல் சிறிதும் வருத்தப்படாததுடன், அவர்களை ஏசவும் இல்லை; குறையும் சொல்லவில்லை. இப்படிப் பட்ட அருமைகள் ஐயா அவர்களிடம் நிறைய உண்டு.

8. சிறைக்கு வந்த பிராமணர்களிடம் பெருந் தன்மையுடன் நடந்தது.

அக்காலத்தில் பத்மநாப ஐயங்கார் என்று ஒருவர் இருந்தார். ஏதோ திருட்டுக் குற்றத்திற்காக நாங்கள் சிறையிலிருந்த காலத்தில், அவரும் சிறையிலிருந்தார். மூன்று மூன்றரையாண்டுச் சிறையிலிருந்தார். அதே சமையத்தில் இன்ஞேர் ஐயங்கார் ஒரு வைப்பகத்தில் பணம் கையாடல் பண்ணி, அவரும் சிறையில் இருந்தார். இவர்களுடன் இன்னெருவரும் வேறு ஒரு குற்றத்திற்காக அவர்களுடன் இருந்தார். அந்த பத்மநாப ஐயங்கார் உச்சிக்குடுமி வைத்திருந்தார். நாளும் பகவத்கீதை படிப்பார். பட்டை நாமமெல்லாம் போட்டுக் கொள்வார். அந்த மூன்று பேரும் பட்டம் படித்தவர்கள் தாம. ஐயா (பெரியார்) தம்மோடு சிறையிலிருந்த அண்ணுத்துரை மற்றும் இருந்தவர்களிடமெல்லாம் கூப்பிட்டுப் 'பிராமணன் கிராமணனெல்லாம் சிறைச்கு அப்பாலே. இங்கே யாருக்கும் மனம் நோக நடக்கக் கூடாது'' என்று சொல்வார். இப்படிச் சொல்லிவிட்டு ஏதாவது பேசும் பொழுதெல்லாம் அவர்கள் பக்கமாக்வே பேசிவிட்டு, அவருக்கு வெளியிலிருந்து வரும் பழங்களையெல்லாம் மற்ற அன்பர்களுக்குக் கொடுக்கும் பொழுது, அவர்களுக்கும் அவர்கள் இருக்கும் அறை அறையாகக் கொண்டுபோய்க் கொடுப்பார்.

சிறையிலிருக்கும் பொழுது ஐயா அவர்களுக்கு அறுபதாவது ஆண்டுவிழா நடந்தது. அக்கால் நான் அங்கிருந்த 'குரோட்டன்' செடிகளை யெல்லாம் பறித்து, மாலைகட்டி, அவரை உட்கார வைத்து

அவர் கழுத்தில் போட்டு, நான், அண்ணுத்துரை, இன்னொருவர் (பெயர் நினைவில் இல்லை) மூவரும் அவரைப பாராட்டிப் பேசினோம் அத்துடன் இந்த ஐயங்கார்களெல்லாம் கூட பேசினார்கள். அவர்கள் பேசும் பொழுது, 'நாங்கள் நூல்களில் படித்திருக்கிறோம், பெரிய வர்கள் எனறால் இப்படி இப்படி இருப்பார்கள் என்பது பற்றியும், அவர்கள் அன்பு வடிவாக இருப்பார்கள் என்றும்! அதை இங்குக் கண்ணாலே காண்கிறோம்' என்றெல்லாம் மிக அழகாக உயர்வாகப் பேசினார்கள். அப்படி, அவர்கள் மனம் புண்படும்படி பெரியார் அவர்கள் ஒருநாள் கூட பேசினது இல்லை.

இன்னொரு செய்தியும் சொல்ல வேண்டும். பெரியார் சிறையில் இருந்த பொழுது காலையில் எழுந்ததும் திருவருட்பா படிப்பார். அப்பொழுது (மார்கழி) சிலை மாதம் வந்தது. அந்தக் காலத்தில் காலையில் திருப்பாவை படிப்பார். அப்பொழுது, அந்த அய்யங்கார்க ளெல்லாரும் இவரைப் பார்த்து "இவர் உள்ளத்தால் பெருமாள் பற்றுளர். பாருங்கள், காலையில் எழுந்ததும் திருப்பாவையை எவ்வளவு அன்பாகப் படிக்கிறார்" என்பார்கள்.

ஆனால் பெரியாருக்கு அந்த நோக்கம் இல்லை. இவருக்கு உள்ள நோக்கம் என்னவென்றால், இந்தத் தமிழ்ச் சுவைக்காகவே படிப்பது. இதெல்லாம் வேடிக்கையாக இருக்கும். ஆனால் பெரியார் தமிழ் மொழியை நன்றாகப் படித்திருக்கின்றார். இலக்கியங்களை யெல்லாம் நன்றாகப் படித்துப் பார்த்திருக்கின்றார். அவற்றையெல்லாம் நன்றாகச் சுவையோடு படிப்பார். அவற்றிலுள்ள சொற்சுவை பொருட்சுவை யெல்லாம் புலப்படும்படி நன்றாகப் படிப்பார். அவர் இசையொடு பாட மாட்டார். ஆனால், ஒருவகையாகச் சொல்லுவார். இவ்வாறு அந்தப் பிராமணர்களிடம் ஒரு சிறிதாவது மனம் வருந்தும்படி நடக்க வில்லை. மற்றவர்களையும் நடக்க விடவில்லை. அங்குள்ள குறும்புக்காரர்கள் வம்பர்களையெல்லாம் கூட கூப்பிட்டு எச்சரிக்கை பண்ணினார்.

(முற்றும்)

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளான்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணக் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் கேட்க!

மக்களவை

சமற்கிருதம் தமிழிலிருந்து தோன்றியதே!

ம:227: அன்பார்ந்த ஐயா, வணக்கம். சென்ற குமுதம் இதழில் திரு. சாத்தப்பா அவர்கள் பாவாணரைப் பற்றிக் குறிப்பிடும் போது 'சமற்கிருதம் தமிழ் மொழியிலிருந்து தோன்றியதே என்னும் கொள்கையுடைய ஆராய்ச்சியாளர்' எனக் குறிப்பிட்டிருந்தார். ஒரு சில இடங்களில், மொழி நடை முதலான சில கண்ணோட்டங்களின் அடிப்படையில் இது போன்ற கூற்றுகள் ஆராச்சியாளர்களுக்குப் பொருந்தலாம். ஆயின், பாவாணர் பற்றி, திரு. சாத்தப்பா அவர்கள் குறிப்பிட்டிருந்தது பொருந்தாது.

ஏனெனில், சமற்கிருதத்திற்குத் தாய்மொழி தமிழே, என்னும் ஒரு முடிவைக் கொள்கையாக வரையறுத்துக் கொண்டு அதற்கேற்ப ஆராய்பவர் பாவாணர் என்னும் பொருளில்தான் அவருடைய கூற்று அமைந்துள்ளது. பாவாணரின் நூல்களைக் கற்ற எவரும் இவ்வாறு கூறத் துணியார்.

வடமொழி, தமிழ் மொழியோடு மேலையாரிய மொழிகளையும், உலகில் சிறந்து விளங்கும் பிறபல்வேறு மொழிகளின் சொற்களையும் சொற்களுக்குரிய வேர்களையும் நன்கு அறிந்த பின்புதான், தமிழ் உலக முதன்மொழி என்பதையும், வடமொழியும் தமிழால் தான் சிறந்த இலக்கிய மொழியாய் மலர்ந்துள்ளது, என்பதையும் கூறியுள்ளார் பாவாணர்.

வடமொழியில் உள்ள சொற்களில் ஐந்தில் இருபங்கு தமிழ்ச் சொற்களாகவும், தமிழ் வேர்ச் சொற்களினின்றும் பிறந்தவை யாகவுமே உள்ளன என்பதைப் பாவாணர் தம் நூல்களில் பல் வேறிடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

தன்மொழிப் பற்றினாலோ, அல்லது அதனை உயர்த்திப் புகழ வேண்டும் என்னும் ஆர்வத்தினாலோ கூறுபவர்களால் மேற் கூறிய வண்ணம் சொற்களை வரையறுத்துக் காட்ட முடியாது. முறையான ஆய்வாளர்களால்தான் இவ்வாறு வரையறுக்க முடியும்.

மேலும், 'சமற்கிருதம்' என்னும் வடமொழிக்குரிய பெயர் வெறும் இடுகுறிப் பெயரன்று; பொருளோடு வைக்கப்பட்ட பெயர்.

அப்பெயரே அம் மொழியின் பிந்திய தன்மையைக் காட்டும். தெளிவு பெற 'பிராகிருதம்' என்னும் (மொழிப் பெயர்ச்) சொல்லை ஒப்பிட்டு நோக்குக.

யாரையும் இவர் இத்தகைய ஆய்வாளர்தாம் என எடுத்த எடுப்பிலேயே முடிவு கட்டுதல் அறிவுடையமை ஆகாது. அவர் எழுதிய ஆய்வு நூல்களைப் படித்தலே முறையாகும். அன்பு கூர்ந்து பாவாணரின் 'வடமொழி வரலாறு' The Primary Classical Lang-uage of the world' என்னும் இரு நூல்களோடு பிற நூல்களையும் படிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

வடமொழிக்குத் துணையாய்-செவிலித்தாயாய் இருந்து அதனை வளப்படுத்திய மொழி தமிழ்தான் என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவமுடியும் என்பதை உறுதியாகவும் பணிவோடும் தெரிவித்துக் கொள்கின்றேன். —புலவர். பொன்முகிலன். கூகலூர்.

(அண்மையில், சென்னையில் நடைபெற்ற உலகத்தமிழ்க் கழகத்தின் நான்காவது மாநாடு பற்றிக் 'குமுதம்' இதழில், திரு. சாத்தப்பா என்பவர் எழுதிய உரைபற்றி, அப்போதே குமுதம் இதழுக்கு அனுப்பிய மடலின்படி.)

இந்தி எதிர்ப்புப் போர்!

ம: 228: இன்று இந்தியைத் திணிப்பதில் கடுவிரைவில் செயலாற்றி வருபவர்களுள் நமது தலைமை அமைச்சரே முதலிடம் பெறுகிறார். முன்னுக்குப் பின் முரணாகச் செயல் ஆற்றுவதில் தலைமையமைச்சரை விட, வேறு யாரும் இருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். தேர்தல்கால வாக்குறுதிகளைக் காற்றில் மிதக்கவிட்டு, இந்த நாட்டை அழிவுப் பாதையில் அழைத்துச் செல்கிறார் என்றால், இவருடைய வல்லாண்மை எப்படி இருக்கும் என்பதில் சிறிதளவேனும் ஐயப்பட வேண்டியதில்லை. தொடக்கத்தில் இவருடைய பேச்சும் இப்பொழுது இவருடைய பேச்சும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது.

அண்மையில் நேராட்சி மாநிலங்களில் இந்தியைத் திணிக்க வகை செய்யும் சட்டம் கொணர்ந்து, அதற்கான விரைவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நடுவணரசு அலுவலகங்களில் நூறு விழுக்காடு செயல் படுத்தப் பட்டுவிட்டதா என்று புள்ளி விளத்தங்களும் கேட்கப்பட்டுள்ளன. Promoting Hindi : The

Hindi Advisory Committee of the union steel and mines ministry has appointed a seven memper supcommittee to visit its various offices and companies in the country make an assessment and suggest measures to implement the use of Hindi'' இவ்வாறு உள்துறை அமைச்சகம், இருப்பு வழித்துறை செய்திப் போக்குவரத்துத்துறை போன்ற துறைகளில் புகுத்தியாகி விட்டது. கூலிப் படையிலும் புகுத்தியாகி விட்டது என்ற நிறைவு பெறுமல், அரசின் கையாட்கள் கீழ்க்காணுமாறு ஆணைகளை நிறை வேற்றி வருகிறது. A 4/ 227 (1) vide para 4 (a) dt 14 Aug 78. There has still not been any appreciaple improvement in the use of Hindi in official matters especially in drafting and noting. As per The present Govt policy all govt. organisations will have to follow the instrucrions issued on this from time to time. Even though we cannot switch over to Hindi all of a sudden efforts shodld be made at least in this direotion. Jcos should themselves set an example so that Ncos working under them are encouraged.

இந்தி படிக்காத காரணியத்தால் ஏறத்தாழ இரண்டு இலக்கம் பேர்கள், பதவி உயர்வு பெற வேண்டிய நேரத்தில் திருப்பி அனுப்பப் பட்டு உள்ளார்கள். அதே நேரத்தில் வடவர்கள் எழுத்தறிவு அற்ற வர்களாக இருந்தாலும், உடனடியாகப் பல படிகளில் பதவி உயர்வு அளிக்கப் பட்டுள்ளது மிகவும் கண்டிக்கத் தக்கது.

புகைவண்டி நிலைய அறிவிப்புகள், பெயர்ப் பலகைகள், வானொலி அறிவிப்புகள், தொலைபேசிக் கட்டணங்களைகளும் இந்தியில் வரத் தொடங்கி விட்டன. பீகார் முதல்வர் எல்லாத் தட்டெழுத்து ஆங்கிலப் பொறிகளையும் விற்றுவிடக் கட்டளையிட்டு விட்டார்கள். வடமாநிலம் நடுவண் மாநிலம், அரியாணு, இராசத்தான், பஞ்சாபு போன்ற மாநிலங்கள் இருமொழிக் கொள்கையை (இந்தி, வடமொழி) கடைப்பிடித்து வருகின்றன, சீனுவில், பீக்கிங் பல்கலைக் கழகத்தில் 50-க்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இந்தியைப் பயிற்றுவிக்க அமர்த்தப் பட்டுள்ள போதிலும் மாணவர்கள் ஒருவர் கூடப் பயில முன் வரவில்லை என்பதும். அண்மையில் சென்ற தாளிகைக் குழாம் வெளியிட்டுள்ள செய்தியாகும். கடந்த ஆண்டே, பல கோடி உருபா செலவில், உலக ஒன்றிப்புக் கழகத்தில், வெளித்துறை அமைச்சர் அடல்பேகாரி வாசுபேயி பேசியது நினைவிருக்கலாம்.

செத்த மொழிக்குப் பல்கலைக் கழகம் கட்டி உயிர் கொடுப்பதும் இந்தி படித்தால் உதவித் தொகை கொடுப்பதுமாக இந்த நாட்டைக் குட்டிச்சுவராக்க இந்தி வெறியர்கள் முற்பட்டுள்ளனர். வட மாநிலத்தில் வெள்ளம் புகுந்து 32 ஆயிரம் ஊர்கள் அடியோடு அடித்துச் செல்லப்பட்டன. பாட்னாவில் தண்ணீர் சூழ இருக்கிறது. பல் ஆயிரம்கோடி உருபாய்கள் இழப்பு. இந்நிலையில் இந்தி இந்தி என்பது எரிகின்ற கொள்ளியில் எண்ணெயை ஊற்றுவது போலாகும்.

இந்நிலையில், தமிழ் நாட்டைப் பல துறைகளிலும் புறக்கணிக்கிறார்கள். அனைத்திந்தியத் தேர்வில் சென்னைப் பல்கலைக் கழக மாணவர்கள் வெற்றி பெறுவதில்லை யென்னும் அதே பொழுதில், தமிழ் நாட்டில்தான் அதிகம் பேர்கள் இந்தி படிக்கிறார்கள் என்னும் பொய்யான தவல்களைச் செய்தித் தாள்களிலும், வானொலி வாயிலாகவும் வெளியிட்டுத் தமிழர் திறமைக்கு மாசு கற்பித்து வருகிறார்கள். முதல்வர் திரு. ம, கோ. இரா. அரசியல் ஊதியம் தேட முற்படாமல் The TamilNadu official Act என்ற சட்டத்தை உடனடியாக (முன்பே கொண்டு வரப்பட்டது) செயல் படுத்தித் தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா நடுவணரசு அலுவலகங்களிலும் தமிழும் ஆங்கிலமுந்தான் வீற்றிருக்க வேண்டும் என்று, மறு கட்டளை பிறப்பித்து, இந்தி என்ற கொடிய நச்சுச் செடி பரவாமல், அறவே ஒழித்தல் வேண்டும், இந்திப் படங்கள் திரையிடுவதையும், இந்திப் பொத்தகங்கள் விற்பனையையும் தடை செய்தல் வேண்டும். குட்டக் குட்டக் குனிபவனும் முட்டாள்! குனியக் குனியக் குட்டுபவனும் முட்டாள்! என்ற நிலை மாறி, தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசியல் ஆட்சிகளும் ஒன்று சேர்ந்து, தங்கள் வேற்றுமைகளையும், காழ்ப் புணர்ச்சிகளையும் களைந்து எதற்காக நாம் இன்னும் குனிந்து குட்டு வாங்க வேண்டும் என்பதை நினைத்து உடனடியாக மொழி நலம் காக்க அணியமாக வேண்டும். மொழி இழிவே இன இழிவாம் என்பதை நினைவு கூர்தல் வேண்டும். இப்பொழுது படை திரண்டால் வெற்றி நமதே! நமது நெடுநாள் வேட்கையான "தனித்தமிழ் நாடு" மறு நொடியே கிடைக்கும். திரட்டுங்கள் படையை! கொட்டுங்கள் போர் முரசை! தமிழ் நாடு தமிழருக்கே! —மு. செகந்நாதன், கல்கத்தா–53.

தக்காரைத் தக்க பணியில் அமர்த்துக.

ம: 229: பெருமதிப்பிற்குரிய ஐயாவுக்கு, வணக்கம். ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றோரையே உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்க அமர்த்த வேண்டும் என்று மேனாள் முதல்வர் அருட்செல்வனார் அவர்கள் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சிக் கல்லூரிகளில் ((Teachers training Colleges) இடமளிக்க வழி வகுத்தார். அத்தகைய திட்டத்தின்கீழ்ப் பயிற்சி

பெற்று நாங்கள் பலரும் இருக்க, தகுதியற்றுரை மேல் நிலைப்பள்ளி களிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கற்பிக்க அமர்த்தி வருவது எந்த அறத்தின் பாற்படுமோ? மடல் விடுத்தும் அதைக் கவனிக்கவில்லை. அரசு அந்த அந்தத் துறையில் அறிவான் மிக்கவர்களை அந்த அந்தத் துறையில் அமர்த்தி மக்களுக்குப் பயன் படும்படி செய்வதோடு செந்தமிழ் மொழியையும் செந்தமிழ் அறிஞர் களையும் போற்றிச் சிறப்பிப்பதைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். —சி. நா. செந்தமிழ்ச்செல்வன். வேங்கைவாடி.

இலக்கிய அழிவு நேரும்.

மா 230: முதன்மொழி காத்திடும் முன்னவ! வாழி! தமிழன் ஏற்றங் கண்டு பெருமை கொள்ளும் உண்மைத் தமிழர்களில் நானும் ஒருவன் இப்பெருமையை ஓராண்டு முன்னர்தான் எங்கள் ஊர் தமிழன்பர் மூலம் தங்கள் இதழைப் படித்ததால் அடைந்தேன். இது காறும் அது போன்று நூல்களைப் படித்தும் வருகிறேன். மிகவும் வருத்தமும் கொள்கிறேன். இத்தகைய நூல்களை நூலகத்தில் வைக்க வில்லை யென்று! அரசு இதை ஏற்கக் கூடாதா?

அண்மையில் அரசு நம் இலக்கியங்களைப் பிறப் மொழியில் வெளியிட முன் வந்திருக்கிறது. இதுவரையிலும் நாம் பெருமை கொள்ளலாம். ஆனல் அதன்பின் நடப்பவைதாம் தலைகப்பிற்கு இடமளிக்கிறது. தமிழ்தான் உலக மொழிகளின் தாயென்று ஆராய்ந்து நிலைநாட்டிவரும் பாவாணர் அவர்களும் தாங்களும் யாரை அன்று முதல் எதிர்த்து வந்தீர்களோ அவர் (திரு. வையாபுரியார்) அன்பளிப்பாய் அளித்திருக்கும் கல்கத்தா தேசிய நூலகத்தில்தான் மொழி பெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் ஆகியவற்றைத் தொகுத்து நூலடைவு ஒன்றினை வெளியிடப் போகிருர்களாம். இதைவிட தம் இலக்கியங்கள் அழிவிற்கு வேறு என்ன வேண்டியிருக்கு?

—இ. அருள்நேயன். மும்முடிசாத்தன்.

“தமிழ்ச்சிட்டு”

சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகள்
பழந்தமிழகத்தில் சாதியிருந்ததில்லை.

பன்மொழிப் புலவர்: இரா. மதிவாணன். க.மு.

தனிக்குடியிருப்புகள் தீண்டாமை கருதியவை யல்ல.

பார்ப்பனச் சேரி பறைச்சேரி என்பன ஒரு குழுவாகச் சேர்ந்து வாழும் குடியிருப்பு என்று மட்டும் பொருள் பட்டன. கால்நடைகளின் தோலுரித்தல், தோலாலான கருவிகள் அல்லது பொருள்கள் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளர்களை ஊரின் தென் கிழக்குத் திசையில் குடியிருத்துவது பழங்கால வழக்கம். முடை நாற்றம் ஊருக்குள் வீசக் கூடாது என்னும் துப்புரவு கருதி, எப்பொழுதும் ஊர் நோக்கிக் காற்று வீசாத திசை தென்கிழக்குத் திசையாக விருப்பதால், அத்திசை அத்தொழிலாளரின் குடியிருப்புக்கு ஒதுக்கப் பட்டது. அதனுல் அத்தொழிலாளர்கள் தீண்டத்தகாத வராகப் பழந்தமிழகத்தில் கருதப்படவில்லை.

ஊரின் பாதுகாப்புக் கருதி, பழக்கமில்லாத புதியவரையும், வெளியூர் வணிகரையும், அயல் நாட்டவரையும் ஊரின் புறத்தே தங்க வைக்கும் வழக்கமிருந்தது. பூம்புகாரில் யவனச் சேரியிருந்தது. கூட்டமாக வரும் வணிகர் (வணிகச் சாத்து) ஊரின் புறத்தே ஆல மரத்தினடியில் தாவளம் (சந்தை) அமைத்து பலநாள் வணிகம் புரிந்தனர். நெல்லை மாவட்டத்தில் இன்றும் சந்தையைத் தாவணி என்றே வழங்குகின்றனர். அதியமான் பெருவழியைக் குறிப்பிடும் கல்வெட்டும் நாவல் தாவளம் என்னும் வணிகரின் இருப்பிடத்தைக் கூறுகிறது. அற நூல்கள் ஓதுவதை அறவே கைவிட்டுக் காமச்சுவை பெருக்கும் வரிப்பாடல்கள், நாட்டியம் ஆகியவற்றில் ஈடுபட்ட பூணூலணிந்த பார்ப்பனர் நிலையினின் இழிந்தவராகக் கருதப்பட்டு மதுரை நகரின்புறத்தே சேரியில் குடியிருத்தப் பட்டனர் என்பதை,

> "வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்து
> புரிநூல் மார்பர் உறைபதி சேப்பின்"

என்னும் சிலப்பதிகார வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆதலால், ஊரின்புறத்தே வாழவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டவர்கள் உடல்நலம், உள்ளநலம், ஊர்நலம் கருதி இடைக் கால ஏற்பாடாக அங்ஙனம் செய்யப் பட்டவரே யன்றி, தீண்டாமை கருதியோ பிறப்பு அடிப்படையிலான வேறுபாடு கருதியோ அன்று. ஒவ்வொரு தொழிலாளியும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்களோடு சேர்ந்து வாழ்வது தொழில் வளர்ச்சிக்கு ஏற்றதா

தலின், தொழிலாளர் குடியிருப்புகள், சேர்ந்து வாழும் கரணியத்தால் சேரிகள் எனப்பட்டன. பார்ப்பனச்சேரி, பாண்சேரி, சொற்சேரி யவனச்சேரி என்னும் சொல்லாட்சிகளை நோக்குக.

புலால் உண்பது சாதியிழிவுக்குக் கரணியமன்று.

மாட்டின் புலால் உண்பது தீண்டாமைக்கும் தனிக்குடியிருப்புக்கும் வழிவகுத்திருக்கும் என்று பர். அம்பேத்துகர் குறிப்பிடுகிறார்.[1] இதுவும் உண்மையன்று என, பர். சர்மா மறுத்திருக்கிறார்.[2] ஏனெனில், பிராமணர்கள் தம் வேள்களில் மாடு, குதிரை போன்ற விலங்குகளைக் கொன்றுண்பது இன்றியமையாததாயிருந்தது.

ஆரியர் வடமேற்கு இந்தியாவில் முதன்முதல் குடியேறிய போது எண்ணிலாத வேள்விகளைச் செய்யக் கருநிற மக்களின் துணையைப் பெற்றனர். தமக்கு வளமான வாழ்வு வந்த காலத்தில் நான்கு சாதிகளைப் பிறப்பினடிப் படையில் பிரித்தனர், ஆதலால் மாட்டின் புலால் உண்பது தீண்டாமைக்குக் கரணியமாய் இருந்திருக்க முடியாது. மாட்டின் புலால் உண்ட யவனர் தமிழரசர் இல்லங்களில் வாயிற் காவலராய் இருந்திருக்கின்றனர். மாட்டைத் தின்ற ஆரியர்களே மாட்டைத் தின்னும் திராவிடர்களை இழிவாகக் கருதுவதை எதிர்த்து, 'சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு' என்பதற்கேற்ப, சேரிக்குள் பார்ப்பனர் புகுந்தால் சேரிப் பெண்கள் சாணிச் சட்டியை உடைக்கும் வழக்கத்தை அண்மைக் காலம்வரை கொண்டிருந்தனர், வேத தொடக்க காலத்தில் வைசவனன் என்னும் நாலாம் வருணத்தவன் வேள்வி செய்திருப்பதால் சூத்திரர் என்று இகழப்பட்டவர்கள் தொடக்க காலத்தில் நாடாலும் மன்னர் மரபினரே ஆவர் என்று பர். சர்மா Sudras in Ancient India' (பக்: 5) என்னும் நூலில் குறிப்பிடிருக்கிறார்,[3]

இன்றைய மாந்தரனைவரும் கற்கால மாந்தரின் வழிமரபினர். கற்கால மாந்தர் மாந்தக் குரங்கிலிருந்து படிமுறை வளர்ச்சி பெற்று வளர்ந்தவர். குரங்கு, யானை போன்றவை புலால் உண்ணாதவை எனவே, உலகமாந்தர் அனைவரும் புலால் உண்ணாத மரபில் வந்தவரேயாவர் என்னும் போது, தாழ்த்தப்பட்டவரும் புலால் உண்ணாத மரபில் வந்தவர் என்பது சொல்லாமலே விளங்கும். கற்காலமாந்தர் தம்மைக் காத்துக் கொள்ள விலங்குகளோடு கட்டிப் புரண்டு

---

1. பர். அம்பேத்துகர். The untouchables ehx.
2. Sudras in Aneient India—Dr. Sharma.
3. மற்றும் இதன் விரிவை, கட்டுரை யாசியரின் 'சாதிகளின் பொய்த்தோற்றம்' என்னும் நூலினுட் காண்க.

போராடிய நிலையில், பற்களால் கடித்துக் குருதிச் சுவையும் புலால் சுவையும் அறிந்தபின் புலால் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டனர். எனவே, தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் புலால் உண்பவர்கள் என்று தாழ்த்திப் பேசுவதில் பொருளில்லை.

தமிழரின் ஓரின வாழ்வு.

உணவு வேறுபாடு, தொழில் வேறுபாடு, செல்வ ஏற்றத்தாழ்வு ஆகியவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பண்பு ஒன்றை மட்டும் பெரிதாக மதித்து அனைவரும் ஒரே இனமாகக் குலவி வாழ்ந்த செயல் தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தலைமுறை தலைமுறையாக வந்த நட்பு, தனக்கும் துடிகொட்டும் இளைஞனுக்கும் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்னும் பொருள்பட வரும்,

'எந்தைக்குத் தந்தை இவனெனக்கு வந்த
குடியொடு கோடா மரபினேன் தனக்கு
வடியுறு தீந்தேறல் வாக்கு'

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலை நோக்குக.

பறை முழக்குவதால் பறையர் என்ற சாதி தோன்றியதாகக் கூறுவது ஒப்புக் கொள்ள முடியாதது. சிவபெருமான் உடுக்கைப் பறையுடையன். நந்தி மத்தளப் பறையுடையவன். தமிழகத்தில் ஐந்திணைப் பெருங்குடி மக்களும் அவ்வந் நிலத்திற்குரிய பண்ணும் பறையும் உடையவராயிருந்தனர். மீன்பிடிக்கும் பரதவர் மீன்கோட் பறை முழக்கினர். ஆனிரை கவரும் வெட்சி மறவர் அனைவரும் ஏறு கோட்பறை முழக்கினர். அனைத்தில்லக் குழந்தைகளும் சிறுபறை முழக்குவர். மலையாளத்தில் பறை என்றால் பேசு என்று பொருள். செய்தி யறிவிப்பவரும் தூது செல்பவரும் பறையர் எனப்பட்டனர். இத் தொழில் இழிவான தன்று. பார்ப்பனரும் தூது சென்றுள்ளனர்.

இப்பொழுதும், தாழ்த்தப்பட்டவர் தம் திருமண காலங்களில் அரச இலச்சினைகளான கொடி, சாமரம் முதலிய விருதுகளுடன் குதிரை மீதேறி ஊர்வலம் வருகின்றனர். தாழ்த்தப்பட்ட வகுப்பான தேவேந்திர பள்ளரினத்து மகளிர் பாடும் தாலட்டுப் பாடலில் பாண்டிய மன்னனைத் தாய்மாமன் என்று குறிப்பிடுவதாக திரு. தேவசகாயம் கூறுகிறார்.

கன்னட நாட்டில் தாழ்த்தப்பட்டவரிடையில் சலவாதி என்றொரு பிரிவினர் உள்ளனர். இவர்கள் சிவ வழிபாட்டில் தளராத கொள்கை யுடையவர். இந்தப் பிரிவைச் சார்ந்தவரும் இரந்துண்டு வாழும் சிவ

வழிபாட்டினருமான துறவியரைக் கண்டால், இலிங்கம் கட்டிய வீர சைவர்கள் சிவனையே நேரில் கண்டாற் போல் பணிந்து வணங்குவர்[1]

ஆந்திர நாட்டில் இலட்சுமம்மா என்னும் தாழ்த்தப்பட்ட பெண் மெய்யுணர்வு கைவரப் பெற்றுத் தவவொழுக்கம் நிரம்பியவளாக இருந்தாள். அவளுக்கு ஆந்திர நாட்டில் கோவில் கட்டப்பட்டுள்ளது. பிராமணர் தவிர்ந்த அனைத்து இந்துக்களும் அக்கோவிலில் வழிபாடாற்றுகின்றனர். ஆரியரின் நால்வருணக் கோட்பாடு மன்னர்களின் ஆதரவுடன் ஊடுருவாத பட்டித் தொட்டிகளிலெல்லாம் பழந்தமிழ இன ஒருமைப்பாடு நிலவி வருகிறது என்பதற்காக இவற்றை இங்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

காவிரியின் வடகரைப் பகுதியைக் கரகநாடு என்றும் தென்கரைப் பகுதியைக் கம்பநாடு என்றும் அழைக்கும் வழக்கம் அண்மைக் காலம் வரை இருந்தது. கம்ப நாட்டினர் அம்மன் கோவிலில் முத்தலை வெட்பாலை கம்பம் நாட்டு விழா சாட்டுவர். கரக நாட்டினர் தலையில் பூங்கரகம் ஏந்தி அம்மனை வழிபடுவர். கம்பநாட்டு அம்மன் விழாக்களில் பொன்னேர் கட்டும் நிகழ்ச்சியில் தாழ்த்தப் பட்டோர் பறையறைந்து வாழ்த்தும் மங்கலமும் பாட, அதை அடியொற்றி வேளாளர் பின் பாட்டுப்பாடி பொன்னேர் ஓட்டுகின்றனர். மேட்டூரை யடுத்த காவேரிபுரம் மாரியம்மன் கோவில் ஆடிவிழாவில் இதனைக் காணலாம். சாதி வேறுபாடற்ற பழந்தமிழரின் குமுகாய அமைப்பின் ஒரு சில நிழல் வடிவங்களாக இவை நமக்குத் தென்படுகின்றன.

கரக நாடுகளில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊர்ப் பண்டிகை எனப்படும் பெருவிழா நடைபெற்று வந்தது. எல்லாவூர்களையும் சார்ந்த நாட்டாண்மைக்காரரும் சேர்ந்து நடத்தும் இவ்விழாவில் தாழ்த்தப்பட்டவர்கள் சமப்பங்கு கொண்டனர். இரு சாராரின் கரகங்களும் முறையே ஆண் கரகம் பெண் கரகம் எனப்படும். விழா முடிவில், அம்மன் கோவில் குளத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் நீரில் விடும் பூமாலைகளும் உயர்சாதியினர் விடும் பூமாலைகளும் ஒன்றுக இணைவது இன்றியமையாத நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. தருமபுரி மாவட்டத்திலுள்ள பென்னுகரத்தில் 1936–ஆம் ஆண்டு இந்த ஊர்ப்பண்டிகை நடைபெற்றது. நால்வருண ஆரியக் கோட்பாடுகளுக்கு ஒருபுறத்திலும் பழந்தமிழ்ப் பொதுமையுணர்வுகளுக்கு மறுபுறமும் ஈடுகொடுக்க முடியாமல் திணறும் நாட்டுபுறத் தமிழர்களின் மனப்பாங்குகளை இவ்விழாக்கள் நினைவுறுத்துகின்றன. பழந்

1. கன்னட அகரமுதலி.

தமிழகத்தில் சாதி வேறுபாட்டுணர்வுகள் இல்லை என்று உறுதிப் படுத்துவதற்கு ஓரிரு ஆணித்தரமான சான்றுகளாக இவை அண்மைக் காலம் வரை நிலவி வருவது அகமகிழ் வூட்டுகிறது.

ஆரியர்க்கே உரிய சாதி வேறுபாட்டுணர்வுகளுக்கு நிலைத்த வாழ்வு தருவதற்காகத் தமிழிலக்கியக் கருத்துகளைத் திரித்துக் கூறுபவர் களும் சொற்பொருள் புரட்டர்களும் தமிழ்ப் பண்பாட்டை மறைக்க முயன்றிருக்கின்றனர். சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியில் தமிழன் என்னும் சொல்லுக்கு, 'பறையனொழிந்த தமிழ்ச் சாதியான்' என்று பொருள் கூறப்பட்டிருப்பதை இதற்குச் சான்றாக எடுத்துக் காட்டலாம். இதன்படி, திருவள்ளுவரையே தமிழர் என்று சொல்ல முடியாது. வள்ளுவர் என்பார் இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ளனர். எதைப் பொறுத்துக் கொண் டாலும் வரலாற்று உண்மைகளை மறைத்து ஓரினத்துக்கு இழிவு கற்பிப் பவர்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது. அவர்களுடைய கண்ணெதிரிலேயே உண்மைகளை வெளிப்படுத்திவிட வேண்டும்.

இழிவை எதிர்க்கும் தன்மான உணர்வு

குமுகாயத்தில் போட்டியும் பகைமையும் வளர்ந்த போது ஒரு வரை ஒருவர் இழித்துப் பேசுவது இயல்பாகி விட்டது. தீய வழுக்கி யும் வாயற் சொல்லாத செம்பொருள் கண்ட சான்றோராகிய தமிழர் மரபில் புறங்கூறிப் பழிக்கும் இழிதகையார். தலையெடுத்த போது அம்முயற்சி எதிர்த்து ஒடுக்கப் பட்டுள்ளது. அக்காலத் தமிழன் எதைப் பொறுத்துக் கொண்டாலும் தன் இனத்தையோ நாட்டையோ தன் தொழிலையோ இகழ்வதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். இனத்தையும் நாட்டையும் வடவர் பழித்த போது செங்குட்டுவன் வடபுலம் நோக்கிப் படையெடுத்தான், சங்கறுக்கும் தொழிலை இழித்துப் பேசியபோது, "சங்கை அரிந்துண்டு வாழ்தும் அரனாரைப் போல இரந்துண்டு வாழ்வதிலேம்" என நக்கீரன் பொங்கி யெழுந் தான். தொழில் கருதி இழிவுபடுத்தும் ஆரியக் கோட்பாடு தமிழகத்தில் புகுந்த காலத்தின் நிகழ்ச்சியிது. தொழிலாலும் பிறப்பாலும் இழிந்த சாதியினராகப் பழிக்கப்பட்டபோது பல்லாயிரம் நக்கீரர்கள் சாதி யிழிவை எதிர்க்க முன்வராதது எழுத்தறியாமையால் நேர்ந்த இடையூறே அன்றி வேறன்று. நக்கீரர் செய்த முழக்கத்திற்குப் பின் நாடு தழுவிய தன்மானவுணர்வின் வெளிப்பாடாக தந்தை பெரியார் சாதியிழிவுகளைக் கல்லியெறிந்து மாபெரும் மறுமலர்ச்சியைச் செய்து காட்டியிருக்கிறார்.

பிறரை இகழ்ந்து பேசுவது உயர் குடிப்பிறப்பாகாது என்றார் வள்ளுவர்.

அரசியல் பக்கம்:

கருணாநிதியும் கலியாணசுந்தரமும்!

—வல்லூறு.

அரசியல் என்பது எப்படியும் இருக்கும் என்றால் நாம் அதைப் பற்றிக கவலைப்படவில்லை. ஆனால் 'இப்படித்தான் இருக்க வேண்டும்' 'இப்படி இருந்தால்தான் தமக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது' என்பதாக ஒரு பொதுநல நோக்கு நம் அரசியல் தலைவர்களுக்கு இருக்குமானால், இருக்கிறதாக அவர்கள் சொல்வது உண்மையானால், 'பொது நிறுத்தம்', 'கடையடைப்பு' என்றெல்லாம் அவர்கள் அடிக்கடி கரடி விளையாட்டு விளையாடுவது நம்மைப் பொறுத்தவரை,

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மை குடிக்கு.

இத்துணை உயர்ந்த பண்பாடு பெற்ற தமிழினத்தைச் சூத்திரர் என இழிவு படுத்திய ஆரியர் எள்ளளவும் உயர்பண்பினர் அல்லர் என்பதுணர்ந்தே நக்கீரர் முதல் பெரியார் வரை தன்மானத் தமிழர் பலரும் ஆரியப் புன்மைகளை எதிர்த்து வந்துள்ளனர். தமிழர் சோற்றையே தின்று தமிழரையே தம்மினும் தாழ்ந்த சாதியினர் எனக் கூறி வந்த இறுமாப்பும் நன்றியிலாவுணர்வும் நானிலம் முழுவதும் நகையாடத் தக்கவாகிவிட்டன. அரசரினும் பிராமணர் உயர்ந்தவர் என்னும் கூற்றை மறுக்கவே புத்தர் புத்தமதத்தைத் தோற்றுவித்தார். சாதியிழிவைப் பொறுத்துக் கொள்ளாதவர்க்கும் சாதியுயர்வை விட்டுக் கொடுக்காதவர்க்கும் இடையில் சாதிக் கலவரங்கள் தோன்றுகின்றன. இதற்கான வினை விதைத்தவர்கள் வினை அறுக்கவில்லை. வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பழந் தமிழகத்தில் சாதி வேறுபாடுகள் அறவே இருந்ததில்லையென்றும் தமிழர் அல்லது திரவிடர் அனைவரும் ஒரு நிகரான ஒரே இனத்தாரே என்றும் உண்மை விளக்கப்படின், சாதிக் கலவரங்கள் எங்கும் தோன்றா.

பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதியினரும் பார்ப்பனரை நோக்க இழிந்த சாதியினராகக் கருதப்பட்டு வந்திருப்பதால் அனைவரும் ஒரே குரலில் சாதியெதிர்ப்புக்கும் சாதியொழிப்புக்கும் குரல் கொடுகக வேண்டியுள்ளது. நக்கீரராகவும் பெரியாராகவும் தமிழரனைவரும் தன்மானவுணர்வால் கிளர்ந்தெழும் நாளே, பழந்தமிழ்ப் பண்பாட்டின் வண்ணம் சாதிப் பிரிவற்ற ஓரினமாகத் தமிழினத்தைக்காணும் நன்னாளாகும்.

சாதியிழிவை ஒப்புக் கொள்ளாத பழந்தமிழரின் வழி வந்த தன்மானவுணர்வே சாதிக் கலவரங்களுக்கு அடிப்படையாகவுள்ளது. எய்தவனை விட்டு விட்டு அம்பை முறித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதிக் கலவரங்களுக்கு அடிப்படையான (இழிவைப் பொறுக்காத) தன்மானவுணர்வு சாதியை ஒழிப்பதில் திசை திருப்பப்பட வேண்டும். பழந்தமிழரின் தன்மானவுணர்வு முழு அளவில் செயற்பட்டால் தமிழினம் உயர்ந்த இடத்தைப் பெறுவது உறுதி. ○

நாகரிக அரசியல் நடவடிக்கையாகாது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

திரு. கலியாணசுந்தரத்திற்கு உண்மையிலேயே பொதுவுடமை உணர்வு இருக்குமானால், அரசியல் குழப்பங்களைக் குறிப்பாகப் பொது மக்களுக்கு ஊறு தரும்படியான, கலவர நடவடிக்கைகளை அவர் கைவிடுவது அவர்க்கும் நல்லது; அவர் கொள்கைக்கும் நல்லது. அவரின் கடந்தகால எந்த நடவடிக்கையும் அவர் ஓர் அரசியல்காரர் என்பதை விட அவர் ஒரு குழப்பக்காரர் என்பதையே நாட்டு மக்களுக்கு உணர்த்தி வருகின்றது. அவர் எடுத்துக் கொண்ட கொள்கை—அல்லது கட்சிச் செயல்கள் என்பவாக எதையும் அவரிடம் நாம் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத அளவில் அவர் போக்கு அமைந்திருப்பதை நாம் மிகுந்த வருத்தத்துடன் சுட்டிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. குழப்பம் அல்லது கலவரம் செய்வதுதான் அவர் அரசியல் கொள்கை யென்றால் அவர் வகையில் நாம் சொல்ல விரும்புவது ஒன்றும் இல்லை. குழம்பிய குட்டையில் ஏதாவது மீனைப் பிடிப்போம் என்பதே அவர் மேற்கொண்ட பொதுவுடைமைக் கொள்கையாக இருக்கட்டும். ஆனால் இந்தக் கருணாநிதி அவர்களுக்கும் இதுதான் கொள்கையா? என்பதை நம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடியவில்லை.

நம்மைப் பொறுத்த வரையில், திரு. கருணாநிதிக்கு நாம் தரும் மதிப்பு, திரு. கலியாணசுந்தரத்திற்குக் கொடுப்பதைவிட மிகவும் கூடுதலானது ஆகும். அப்படி ஒரு தேவையும் நமக்கு உண்டு. அவ்வாறிருக்கையில் அவர் திரு. கலியாணசுந்தரம் என்னும் குழபப அரசியல்காரரின் பின்னால் போகிறாரே, அதுதான் உண்மையிலேயே நமக்கு விளங்கவில்லை. அவர் இந்த அளவுக்குத் தன்னம்பிக்கையையும், தன்மதிப்பையும், தன்னறிவையும் இழந்து விடக்கூடாது என்பதே நம் கவலை.

திரு. கலியாணசுந்தரம் எத்தகைய அரசியல் கொள்கையைக் கடைப்பிடிப்பவராகவும் இருக்கட்டும். ஆனால், அவர் செயல்களை வைத்துப் பார்த்தால், யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர் அதற்கு எதிராகத்தான் செயல்படுவார் என்பதை நம்மைவிட திரு. கருணாநிதி நன்கு உணர்ந்திருப்பார். தாம் ஆட்சியிலிருந்த போது இப்பொழுதைய இதே முதல்வரோடு சேர்ந்து கொண்டு தம்மையும் எதிர்த்து திரு. கலியாணசுந்தரம் பல குழப்பங்கள் செய்ததை திரு. கருணாநிதி அவ்வளவு விரைவில் மறந்திருக்க முடியாது.

எதிர்க்கட்சி என்றால் ஆளுங்கட்சி செய்வதை எதையும் எதிர்க்கலாம்—எதிர்க்க வேண்டும் என்பதுதான் இவர்களின் அரசியல் பாடம் என்றால், இவர்கள் கற்ற அரசியல் கல்வி அவ்வளவு நெறிமுறையானது அன்று; இவர்களுக்கு அக்கல்வியைக் கற்பித்த அரசியல் ஆசிரியர்களும் அவ்வளவு தெளிவுடையவர்களாக இருந்

திருக்க முடியாது. ஏதோ அரசியல் என்பது தங்களுக்கு மட்டுமே கைவந்த கலை என்பதாக இவர்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது. இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்திராகாந்தியும் கூட ஓர் அரசியல்காரராகத்தான் மதிக்கப் பெறுகிறார். ஆனால், அதுபோலும் அறிவற்ற அரசியல் நடவடிக்கைகளைத்தாம் இவர்களும் விரும்பு கிறார்களா என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நம் அறிவுக்கு எட்டியவரை திரு கலியாணசுந்தரத்தின் குழப்ப மான அரசியல் நடவடிக்கைகளிலும கூட ஒருவகையான தெளிவு (!) இருக்கவே செய்கிறது. இந்தியாவில் எவர் அரசியல் தலைமை பூண்டாலும், அவரை எதிர்த்துக் குழப்பம் செய்வதும், தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால்கள் என்று மூரண்டு பிடிப்பதும், எதுவும் உருசியாவிலிருந்து இறக்குமதி செய்தால்தான் உயர்ச்சி என்பதும் அவரைப் பொறுத்தவரை அவரின் ஒரே கொள்கை. அக்கொள்கை யில எத்தனை ஓட்டை உடைசல்கள் இருந்தாலும் அல்லது இடியே விழுந்தாலும், அவர் அதைத்தான் கட்டிக் கொண்டு அழுவார் என்பது தெளிவு!

ஆனால், நாம் மதிக்கின்ற கலைஞர் கருணாநிதி அவரைப் போன்றவர் அல்லரே! அவருக்கென்று ஒரு தனிக் கொள்கை உண்டு; தனி வரலாறு உண்டு; தனி நோக்கம் உண்டு; தனி முயற்சிகள் உண்டு; அவ்வாறிருந்தும் இவர் ஏன் அவர் பின்னால் கற்களை மடியில் கட்டிக் கொண்டு தெரு உலா வருகிறார் என்பது நமக்கு விளங்க வில்லை.

கலைஞருக்கு நாம் மிகவும் அன்பாகவும் அதே பொழுதில் மிகவும் கண்டிப்பாகவும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். அவர் போக்கின் சவலைத்தன்மையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அரசியல் உத்திக்கு அவர் நெடுங்கழுத்து வளையவில்லை யானாலும் 'சிற்றினஞ் சேராமை' என்னும் உத்திக்காயினும் அவர் இணக்கம் காட்டுதல் வேண்டும். விழுந்து விட்ட அவர் எழ விரும்புகிறார். தம்மை நோக்கி நீட்டப்படும் கைகளை அவர் அடையாளம் தெரிந்து கொள் ளுதல் நலம். அவருக்கு எவ்வளவோ கடமைகள் உண்டு. கட்டாயம் நிறைவேற்றப் படவேண்டியவை அவை. அவர் அவற்றைச் செய்யா மல் விட்டு விட்டால் அவர் வரலாறே ஓர் அவல நாடகமாகப் போய் விடும். அவர் எந்த நிலையிலும் தன்னம்பிக்கையை இழந்து விடல் கூடாது. அவரின் அண்மைக்காலச் செயல்களும், தொடர்புகளும் நீட்டிய கைகளை யெல்லாம் அடையாளந் தெரியாமல் பிடித்துக் கொண்டு, அவையிழுத்த இழுப்புக்கு ஓடோடி நிற்கும் அவலமும், அவரை தன்னம்பிக்கை யற்றவராகவே நமக்குக் காட்டுகின்றன.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர்; புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு

கழகக் கால நடுகற்கள் கண்டுபிடிப்பு!

கோவை மாவட்டம், சத்தியமங்கலத்திற்கு அருகில் உள்ள விண்ணம் பள்ளியில், கழகக் (சங்க)காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் இரண்டும், பிற்காலப் புலிக் குத்திக்கல் ஒன்றும் ஆக மூன்று நடுகற்கள் உள்ளன. இவற்றைக் கூகலூர் வரலாற்றுப் பேரவையினர் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர்.

போர்க்கல்:

போரில் வீரச்சாவு அடைந்த வீரர்களுக்கு நடுகல் எடுத்து வழிபடுவது தமிழக மரபு. பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறும் வஞ்சித்திணைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் முறையில் இந்நடுகல் அமைந்துள்ளது. வீரர் இருவர் எதிரிகளின் படைகளை அழித்து, மேலும் சென்று வாளோடு போரிடும் காட்சி புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய நடுகல் இது. இதனை இக்கல்லின் மழுங்கிய தன்மை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. (பின்பக்கம் பார்க்க)

(முன்பக்கத் தொடர்ச்சி)

—என்னும் (597) திருக்குறளறிவுரையை நம்மைவிட அவர் நன்கு உணர்ந்திருக்கக் கூடும்.

கலியாணசுந்தரங்கள் திசைவேறு; கொள்கைவேறு. வெறும் குழப்பத்திற்காகவோ, அல்லது அவரால் இழந்த நாற்காலி எதிர்ந்து வரும் என்னும் நம்பிக்கை கொண்டோ, அவரைப் பின்பற்றிச் செல்லல் வேண்டா. உங்கள் தமிழ் உண்மையான தமிழென்றால் உங்களை அது தூக்கி நிலைநிறுத்தும். உங்கள் செயல் உண்மையான மக்களை நோக்கிய செயலென்றால், உங்கட்குக் கட்டாயம் அரண் அமைத்துத் தரும். மற்றபடி வெறும் அரசியல் ஆரவாரங்கள் பயனளிக்கவே அளிக்கா என்பதை நம்புங்கள். மடியில் கனமுள்ளவர்களையும், அடியில் குணமாறுபாடு கொண்டவர்களையும் வழித் துணையாக அமைத்துக் கொள்ள வேண்டா.

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை! —(814)

தன் துணை யின்றால் பகையிரண்டால் தான்ஒருவன்
இன் துணையாக் கொள்கவற்றின் ஒன்று! —(875)

திரு. கலியாணசுந்தரம் நம் எதிரியல்லர். உங்களைப் பொறுத்தவரை உங்கட்கு இரண்டு அரசியல் எதிரிகள்! மேற்கண்ட குறளடிகளையும் உங்கள் அரசியல் எதிரிகளையும் மாறிமாறி எண்ணிப் பாருங்கள். முடிவு தானே விளங்கும். அப்பொழுதும் முடிவு தெரியவில்லையானால், காலந்தான் நமக்கு ஆசிரியனாக வருதல் வேண்டும்.

எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று —(655)

புலிக்குடும்பத்தோடு போர்:

இது போன்ற நடுகல் இதுவரை நம் நாட்டின் எந்தப் பகுதியிலும் கிடைக்க வில்லை. ஓர் ஆண்புலியுடன் வீரன் ஒருவன் போரிடுகிறான். பெண்புலி அந்த வீரனைப் பின்புறமாய்த் தாக்க முனைகிறது. இதைக் கண்ட அவ்வீரனின் நாய் பெண்புலியின் மீது பாய்ந்து அதனோடு போராடுகிறது. புலியின் குட்டியோ எதையும் கண்டு கொள்ளாமல், போரிடும் தாய்ப் புலியின் மடியில் பால் குடித்துக் கொண்டிருக்கிறது.

புலியன்பட்டி:

குட்டியோடு வந்த, சினம் மிகுந்த, புலிக் குடும்பத்தோடு போரிட்டு, வீரமரணம் அடைந்த அவ்வீரனுக்கும், அவனது நாய்க்கும் நினைவாக எடுக்கப்பட்ட இந்நடுகல் மிக்க எழுச்சி யூட்டும் முறையில் அமைந்துள்ளது.

புலிக் குடும்பத்தை வீழ்த்திப் புகழ் பெற்றதால் இவனைப் புலியன் என்றும், இவன் பெயரால் அமைந்த ஊரே இப்போதுள்ள புலியன் பட்டி (புளியன்பட்டி) எனவும் கூறலாம். இந்நடுகல் உள்ள இடத்திற்கு அருகில் தான் (புன்செய்ப்) புளியம் பட்டி உள்ளது.

புலிக்கல்:

காட்டிலிருந்து ஊருக்குள் புகுந்து வந்த புலியொன்றை வீரன் ஒருவன் கொன்று தானும் மாய்ந்த புலிக் குத்திக்கல் ஒன்றும் இவ்விடத்தில் உள்ளது. இம் மூன்று கற்களும் ஏறத்தாழ ஐந்து அடி நீளமும் மூன்று அடி அகலமும், ஓர் அடி கனமும் உள்ளவை. "பீடும் பெயரும் எழுதி அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" என்றும், "நடுகள் —......கோடுயர் பிறங்குநிலை" என்றும வரும் புறநானூற்றுப் பாடல்களுக்கு ஏற்ப (பிறங்குநிலை—விளங்கித் தோன்றும் நிலை) ஐந்து அடி உயரத்தோடு கூடிய, பெரிய கல்லை நடுகல்லாய் அமைத்துள்ளனர். இதன் அமைப்பும் தோற்றமுமே இது கழகக் (சங்க)கால நடுகல் என்பதைக் காட்டும் சிறந்த சான்றுகளாக உள்ளன.

இந்நடுகற்களைக் கொண்டு கல்வீடு அமைத்து, மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். புறத்துறை பற்றிய தமிழ் இலக்கண நூலான "புறப்பொருள் வெண்பாமாலை" கூறும் "இல் கொண்டு புகுதல்" என்ற முறைப்படி அமைக்கப்பட்டிருந்த கல்வீடு இப்போது சிதைந்துள்ளது. அதனால் இந் நடுகற்கள் தரையில் விழுந்து கிடக்கின்றன.

தமிழ் நாட்டில் முதன் முதல் கிடைத்துள்ள கழகக் (சங்க)கால நடுகற்கள் என இவற்றைத் தமிழக வரலாற்றுப் பேரவை, கூகலூர்க் கிளையைச் சார்ந்த தலைவர் திரு. கூ. ப. சின்னசாமியும் செயலர் புலவர். திரு. பொன்முகிலன் அவர்களும் கூறுகின்றனர். ●

2000 ஆண்டுக்கால அடிமை நிலையை 200 ஆண்டுக் காலத்தில் உணர்த்தத் துணைநின்றது ஆங்கிலமன்றோ? தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் ஆங்கிலப் புலமையும், அவர்தம் நூற்களுக்கு நீண்ட ஆங்கில முன்னுரை எழுதியமையும், தமிழின் மேன்மையை உலகவரங்கில் நிலைநிறுத்த மொழி நூன் முதறிஞர் பாவாணர் ஐயா அவர்கள் 'The Primary classical Language of the world', 'The Lemurian Language and its ramification' என்ற ஆங்கில நூற்களை எழுதியமையும் அடிமைத் தனம்தானா? ஆங்கிலம் அயன்மொழியே! ஆயின் தமிழ்க்கும்பத்தை உலக வரங்குக் கோபுரத்தில் ஏற்று தற்கு ஆங்கில ஏணி இன்றியமையாதது. இதனை அறியாதார் அறியாதாரே!

'தமிழே இவ்விந்திய நாட்டின் ஆட்சி மொழியாதற்குரியது; அதற்கான காலம் அமையும்வரை ஆங்கிலமே ஆட்சிமொழியாதல் வேண்டும்' என்ற மறைமலையடிகளாரின் கருத்தை உட்கொண் டெழுந்ததுதானே ஆட்சிமொழித் தீர்மானம்? ஆங்கிலம் வேண்டா மென்று எப்போது கூறுகின்றோமோ அந்நொடியே இந்தி நம் குரல் வளையைக் கவ்விவிடாதா?

மாநாடு ஒரு நாள் முழுதும் நடைபெற்றும் மாநாடு ஒரு முற்பகல் மட்டுமே நடந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளதேன்? மாநாட்டு அவைத் தலைவர் புலவர் திரு. நக்கீரனார் ஒரு கருத்தைக் கூறி அதையும் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்று கூற, அவ்வாறே அஃது 24 ஆவது தீர்மானமாக ஏற்கப்பட்டதைப் போலத் திருநாவுக்கரசர் தம் கருத்தைக் கூறியிருக்கலாமே! மாநாட்டில் உரையாற்றிய மறை. திருநாவுக்கரசர், (மாநாட்டவையினர் தீர்மானத்தை "எதிர்க்காதும் உடன்படாதும் வாளாவிருந்த" நிலையில்) தீர்மானங்கள் பற்றிக் கருத்தொன்றையும் அப்போதே கூறாது வாய்முடியிருந்துவிட்டு மூன்று நான்கு திங்கட்குப் பின்னர்ப் புலம்புவதன் பொருள் என்ன?

மறை. திருநாவுக்கரசரின் வாய்மொழி 'பெரியாரின் பண்பு நலனு'கத் தென்மொழியில் இடம் பெற்றிருப்பது நல் விருந்தே! பெரியார் தம் தொண்டால் அடைந்த வெற்றிகள் பலவே! ஆயின் பெரியாருடன் பல திங்கள் உறைந்தவரும் பெரியாரின் அன்பால் பேணப்பட்டவருமாகிய திருநாவுக்கரசர் பெரியார் தொடர்பால் ஓர் இம்மியளவும் மாறவில்லை என்பது பெரியாருக்கேற்பட்ட பெருந் தோல்வி என்பது என் கருத்து.

1974-ஆம் ஆண்டில் ஒருமுறை மறை. திருநாவுக்கரசர் வெங்காலூரில் உள்ள சிதம்பரனார் நூலகத்திற்கு வந்திருந்தபோது என்னுடைய நண்பராகிய புலவர் ஒருவர். 'அடிகளாரைக் காணும் வாய்ப்புக் கிட்டவில்லை யாயினும் அடிகளாரின் மகனாரையாவது காணலாம்' என்று ஆவலுடன் சென்றாராக அந்நண்பரைப் பார்த்து, "ஐயோ! நீறில்லா நெற்றிபாழ்; திருநீறு அணிந்து கொண்டு வாருங்கள்" என்று கூறினராம் திருநாவுக்கரசர்! ஆண்டுக்கணக்கில் அடைத்துக் கிடந்த வழிபாட்டறையைத் திருநாவுக்கரசருக்காகத் திறந்து விட்டவர் பெரியார். நீறில்லா நெற்றியைக் காணவும் விரும்பாதவர் திருநாவுக்கரசர். என்னே முரண்!

—கு. பூங்காவனம், வெங்காலூர்-1.

0: 609: மாண்புடையீர், வணக்கம். நலம் நாடலுமஃதே. தமிழக அரசு தந்தை பெரியார் நூற்றாண்டின் அடிப்படையில் எழுத்துச் சீர்த்திருத்தத்தைச் செயற்படுத்த முனைந்தமை பாராட்டற் பால தொன்றே. ஆயினும் உயிர் எழுத்துகளான ஐ, ஒள என்னுமிரண்டினை

'அய்' என்றும் 'அவ்' என்றும் எழுத ஆணையிட்டிருப்பது வேண்டாத ஒன்றாகும். இவ்விரு எழுத்துகளையும் வடமொழி சந்தியக்கரங்களாகக் கருதுதலும் தமிழறியாமை காட்டுவதன்றி வேறு அன்று. ஐ, ஔ என்னுமிரு தனி உயிரொலிகளைக் கூட்டொலிகளாகக் கருதி, அவற்றுக்கமைந்த வெற்றுக் குறியீடுகள் அவ்வெழுத்துகளிரண்டு மெனப் பெரியார் கருதியதும் பொருத்தமானதன்று. பெரியாரைப் பெரிதும் மதிப்பவனேயான். ஆயினும் மொழித்துறையில் அவர் கருத்துட் சில கொள்ளற்பாலனவல்ல என்பதைக் குறிப்பிடவிழை கிறேன். அரசு அவ்விரு எழுத்துகள் அப்படியே வழங்கிவர மீண்டு மொரு திருத்த ஆணை வெளியிடுதல் வேண்டும். இல்லெனில் இலக்கண மரபு, நூன்மரபு, மொழிமரபு, ஒலிமரபு அனைத்தும் சீர்குலையுமென்பதனை வலியுறுத்தி உணர்த்த விழைகிறேன். புலவர் உலகம் இது குறித்து விரைந்து செயற்படுமோக! நன்றி.

—தி. நா. அறிவு ஒளி. திருக்கழுக்குன்றம்.

0. 610; அன்புடைய ஐயா, வணக்கம் பல. அரசியல்காரர் களால், தமிழ்க் கொலை செய்யப்படுகிறது. இதையும் தாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். திரு. அண்ணாத்துரையார், ஆட்சிக் காலத்தில் திருத்தாத தமிழ் எழுத்தை இன்று திருத்த வேண்டும் என்ற தேவை என்ன? தமிழில் வடஎழுத்துகள் பலவும் சொற்கள் பலவும் இருக்கையில் எழுத்தை மட்டும் திருத்தவேண்டும் என்ற தேவை என்ன? ஏறத்தாழ இரண்டு ஆயிரம் ஆண்டுகள் உள்ள தமிழ் எழுத்துகளை எடுத்தாளப்பட்ட எழுத்துகளை இன்று, சட்டத்தின் மூலம் திருத்து கிறார்களாம்! இஃது என்ன கொடுமை! கேட்பார் அற்ற நாடு, இனம், மொழியாகிவிட்டனவா? அரசியல் சூதர்களின் சூழ்ச்சியாகும், இச் செயல்.

தமிழ்க் காப்பாளர்கள் என்று சொல்லிக்கொண்டு, தமிழை விற்றுப் பிழைக்கும் பதடிகள் இச்செயலைச் செய்கின்றனர். இதனால் தமிழின் இனிமை அழகு கெடும். தமிழகச் சட்டமன்றத்தில், எதிர்கட்சித் தலைவராய் இருக்கும்; தமிழ்க் காப்பாளர் திரு. அருட்செல்வனார் அவர்கள் ஏன் வாய்மூடி ஊமையாகிவிட்டார்? ஆரியர் கூடாது என்று சொல்லும் திராவிடர்கழகத்தினர்-ஆரியனைத் திட்டும் இவர்கள், வட சொற்களையும் ஷ, ஸ, ஜ-க்ஷ இப்படிப் பட்ட வட எழுத்துகளையும் ஏன் பயன்படுத்தி உள்ளனர். இவர்கள்தாம், தமிழைத் திருத்துகிறார்க ளாம். அன்று, தமிழர்கள் மூன்று கழகம் வைத்து, மன்னர்களும் புலவர்களும் மக்களும் ஏற்றுக் கொண்ட எழுத்தை இன்றைய கூத்தன் அரசு திருத்துகிறதாம். இஃது என்ன கொடுமை?

தஞ்சைப் புலிக்கொடியோன். பரக்கலக்கோட்டை.

0:611: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐயா. வணக்கம் தென்மொழியிதழைக் கண்ணுற்றேன். அட்டையிதழில் 'ஓலை' யென்பதைக் கண்டதும் அதிர்ச்சியுற்றேன். மறைமலையடிகளும், தேவநேயப் பாவாணரும் அறியாத, செய்யமுடியாத தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்ய உடன்பட்டீர்கள். ஏதும் அறியா இராமச் சந்திரன் அரசு செய்த செயல்கட்குத் தங்களைப் போன்றோர் எதிர்ப் பினைச் செய்வார்கள் என்றிருந்தேன். தாங்களும் தமிழுக்கு இரண்டகம் செய்யப் புறப்பட்டு விட்டீர்கள்.

—சங்க-தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).